Registered as a news paper.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email:-jaffna@expoavi.com, reservations@expoavi.com
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை
எக்ஸ்போ எயார்
வான் வெளியில்
உங்கள் நண்பன்...

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 பங்குனி 07 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 முஹறம் 28 (20.03.2004) சனிக்கிழமை இதழ்:171

## தாயகம் தழுவிய ரீதியில்

# அன்னை பூபதியின் நினைவுநாள் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு!

தியாகி அன்னைபூபதியின் 16ம் ஆண்டு நினைவுநாளின் ஆரம்பநாள் நிகழ்வுகள் நேற்று தாயகம் தழுவிய ாதியில் உணர்வு பூர்வமாகக் கடைப் பிடிக்கப்பட்டது.

அன்னை பூபதியின் 16 ஆம் ஆண்டு நினைவு நாளின் ஆரம்ப நாள் நிகழ்வுகள் நேற்றுக் காலை தமிழீழத் தேசியக்கொடி ஏற்றலுடன் ஆரம்பமாகி, உணர்வு பூர்வமாக இடம்பெற்றது.

தாயகமெங்கும் நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டு அன்னையின் திருவுருவப்படம் வைக்கப்பட்டுள்ளதுடன் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு தாயகம் எழுச்சிக் கோலம் பூண்டிருந்தது.

இதேவேளை, புலம்பெயர்ந்த நாடுகளிலும் இந்த நிகழ்வு உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அன்னை பூபதியின் 16 ஆம் ஆண்டு நினைவுநாளின் ஆரம்பநாள் நிகழ்வுகள் நேற்று உடையார்கட்டு மூங்கிலாற்றில் அமைந்துள்ள மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட மாவீரர் நினைவு மண்டபத்தில் உணர்வு பூர்வமாகக் கடைப்பிடிக்கப் பட்டது.

நேற்றுக் காலை 9 மணிக்கு மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட தொடர்பகப் பொறுப்பாளர் ஜங்கரன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அத்துமீறி மீன்பிடித்த

# தமிழக மீனவர்கள் நால்வர் கடற்படையினரால் கைது!

(மன்னார்)

தலைமன்னார் உறுமலைக் கடற்பரப்பில் மீன்பிடித்துக்கொண்டிருந்த நான்கு இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டதுடன், அவர்களது இழுவைப்படகுகளும் தடுத்துவைக்கப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் காலை 6.30 மணியளவில் இடம்பெற்றதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நேற்றுமுன்தினம் தலைமன்னார் கடலில் அத்துமீறி மீன்பிடித்துக்கொண்டிருந்த இந்திய மீனவர்களை அப்பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் கைதுசெய்தனர்.

அத்துடன் இவர்களிடமிருந்து இரண்டு மீன்பிடி வலைகள், 2x6 அளவுடைய வெற்றுக்கான்கள், ஜெலிக்நெற் குச்சிகள், ஒரு டிட்னேற்றர், 4 பியூஸ் என்பனவும் கடற்படையினரால் மீட்கப்பட்டது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட நான்கு மீனவர்களும், அவர்களது உடமைகளும் கடற்படையினரால் தலைமன்னார் (12 ஆம் பக்கம் பார்க்க)

# பயங்கரவாதத்திற்கு எதிரான போருக்கு அமெரிக்கா தலைமைதாங்க வேண்டும்!

## லக்ஷ்மன் கதிர்காமர் கோரிக்கை



(கொழும்பு)

**பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்திற்கு அமெரிக்கா தலைமைதாங்க வேண்டுமென ஊடகத்துறை அமைச்சரும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் கோரிக்கை விடுத்துள்ளார்.**

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற தெற்காசியாவில் அமெரிக்காவின் பங்கு என்ற தலைப்பில் இடம பெற்ற கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே லக்ஷ்மன் கதிர்காமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சர்வதேச ஆய்வுக்கான பண்டாரநாயக்க நிலையத்தின் தலைவரான லக்ஷ்மன் கதிர்காமர் அங்கு மேலும் உரையாற்றுகையில்-

ஈராக்கில் இடம்பெற்ற சம்பவங்களால் அமெரிக்காவுக்கு ஏற்பட்ட களங்கம் பற்றிப் பலரும் கவலை அடைந்துள்ளனர்.

பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்திற்கு அமெரிக்கா தலைமைத்துவம் வகிக்க வேண்டும். இதற்கு ஜனநாயகப் போக்குள்ள சமூகங்கள் அவர்களுடன் இணைந்து செயற்படவேண்டும்.

ஈராக்கின் விவகாரங்கள் குறித்துப் பொருட்படுத்தாமல், ஜனநாயக நாடுகளின் சமூகங்களில் அமெரிக்கா அரசாங்கத்துடன் பேச்சு நடத்தி அமெரிக்க மக்களுடன் இணைந்து கொள்ளவேண்டும் என்றும் கதிர்காமர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறு இணைந்துகொள்வதன்மூலம் அமெரிக்கா தனித்துவிடப்பட்ட உணர்விலிருந்து விடுபடும் என்றும் கதிர்காமர் மேலும் குறிப்பிட்டார்.

# கரு, மஹிந்தவுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல்

## புலனாய்வு அறிக்கையில் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய ஆகியோருக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக புலனாய்வுத்துறை அறிக்கைகளை மேற்கோள்காட்டி இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டது.

இதுகுறித்து புலனாய்வுப்பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில் -

மிகவும் நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து கிடைத்த அறிக்கையில் இருந்து சில கட்சிகள் இந்த இரண்டு தலைவர்களும் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபடும் போது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்ததாகத் தெரியவந்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அடுத்தமாதச் சம்பளம் ஏப்ரல் ஆறாம் திகதி!

அரசாங்க ஊழியர்களுக்கான ஏப்ரல் மாதச் சம்பளக் கொடுப்பனவுகளை அடுத்த மாதம் ஆறாம் திகதி வழங்குமாறு, நிதியமைச்சர் கே.என்.சொக்சி உத்தரவிட்டிருப்பதாக நிதியமைச்சின் செய்திக்குறிப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

மேலும் அரச ஊழியர்களின் இம்மாதச் சம்பளக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு

# ஜனாதிபதி, பிரதமரின் பாதுகாப்பு அதிகரிப்பு!

## பொலிஸ்மா அதிபர் உத்தரவு

(கொழும்பு)

# கொத்தணி வாக்களிப்பு நிலையம் முகமாலையில் அமைக்கப்படும்!

## ஜனாதிபதி, பிரதமரின் பாதுகாப்பு அதிகரிப்பு!

### பொலிஸ்மா அதிபர் உத்தரவு

(கொழும்பு)

அடுத்த மாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்றப் பொதுத்தேர்தலை முன்னிட்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கான பாதுகாப்பு 50 வீதத்தினால் அதிகரிக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு முன்னர் 50 படையின் பாதுகாப்பு வழங்கியிருந்த தொகை இப்போது 75 பேராக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி சந்திரிகா 1999 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின் போது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் ஒரு கண்ணை இழந்தார். 2001 ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்தின்போது பிரதமர் ரணில் குண்டுத்தாக்குதலில் உயிர் தப்பினார்.

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் பாதுபாப்பு தொடர்பான எந்தக் குறைபாடும் இருக்காது. மேலும் புதிய (12 ஆம் பக்கம் பார்க்க)

# கொத்தணி வாக்களிப்பு நிலையம் முகமாலையில் அமைக்கப்படும்!

## சோதனைகளின்றி வாக்களிக்க அனுமதி

(யாழ்ப்பாணம்)

இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதியில் உள்ள வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு ஏதுவாக, யாழ்ப்பாணத்தில் இருந்து செல்லும் பயணிகளை முகமாலையில் இராணுவத்தினர் சோதனைசெய்யும் இடத்தில் இருந்து தேர்தல் நடைபெறும் தினத்தன்று படையினர் தற்காலிகமாக பின் நோக்கி நகர்த்தப்படுவர் என யாழ்.மாவட்ட தேர்தல் தெரிவித்தாட்சி அலுவலர் தெரிவித்தார்.

நேற்றையதினம் யாழ். செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

விடுவிக்கப்படாத பகுதிகளில் உள்ள மக்கள் வாக்களிப்பது தொடர்பாக தேர்தல் ஆணையாளரிடம் கேட்டபோது, பொலிஸ் அதிகாரிகள், இராணுவு அதிகாரிகளுடன் கலந்துரையாடி ஓர் முடிவினை எடுத்து அதனை அமுல்படுத்துமாறு கூறியிருந்தார். இதற்கமைய கிளிநொச்சி அரசாங்க அதிபர் இராணுவ கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க, யாழ்.மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோருடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்த தீர்மானம் ஒன்றை ஏடுத்துள்ளார்.

இதன்படி முகமாலையில் கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளது. அந்த வாக்களிப்பு நிலையங்களில் ஏப்ரல் 2 ஆம் திகதி காலை 7 மணி முதல் வாக்களிக்க அனுமதிக்கப்படுவர்.

வாக்காளர்கள் படையினரால் சோதனை செய்யப்படமாட்டார்கள். ஆனால் பொதிகளுடன் வரும் (12 ஆம் பக்கம் பார்க்க)

மாதம் ஆறாம் திகதி வழங்குமாறு, நிதியமைச்சர் கே.என்.சொக்சி உத்தரவிட்டிருப்பதாக நிதியமைச்சின் செய்திக்குறிப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

மேலும் அரச ஊழியர்களின் இம்மாதச் சம்பளக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறும் இதற்கான செயல்முறைகள் நேற்று முதல் அமுலுக்கு வந்திருப்பதாகவும், இம்மாதச்சம்பளத்துடன் பண்டிகைக்காலக் முற்பணத்தையும் வழங்குமாறும் நிதியமைச்சர் உத்தரவிட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## சீனியின் விலை 5 ரூபாவால் குறைப்பு!

ஒரு கிலோ சீனியின் விலை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் 5 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாக பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சீனிக்கான இறக்குமதித் தீர்வை அதிகரிக்கப்பட்டதை அடுத்து, சீனி இறக்குமதி தடைப்பட்டிருந்தது.

இதனால், நாட்டில் சீனியின் விலை 31 ரூபாவில் இருந்து 41 ரூபாவரை அதிகரித்தது.

இதனை அடுத்து அரசாங்கம் சீனி இறக்குமதிக்கான (12 ஆம் பக்கம் பார்க்க)




## யாழ். குடாநாட்டில்

# 6 இலட்சத்து 34 ஆயிரம் பேருக்கு வாக்காளர் அட்டை அனுப்பிவைப்பு

### தேர்தல் திணைக்களம் தகவல்

யாழ்.மாவட்டத்தில் இம்முறை 6 இலட்சத்து 34 ஆயிரத்து 135 பேருக்கு வாக்காளர் அட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ். செயலகத்தில் இயங்கும் தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இது குறித்து அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது -

யாழ்.மாவட்டத்தில் 6 லட்சத்து 44 ஆயிரத்து 279 பேர் வாக்களிப்பதற்கான தகுதி பெற்றிருந்தபோதிலும், அவர்களில் 4 ஆயிரத்து 56 பேர் தபால்மூலம் வாக்களிக்கத் தகுதிபெற்றிருந்தாலும், 6 ஆயிரத்து 82 பேர்வரை யாழ்.மாவட்டத்திற்கு வெளியேசென்றிருப்பதால் அவர்களின் வாக்குகள் நிராகரிக்கப்பட்டிருப்பதாலும் 10 ஆயிரத்து 144 வாக்காளர் அட்டைகள் தவிர்ந்த ஏனைய 6 லட்சத்து 34 ஆயிரத்து 135 பேருக்கான வாக்காளர் அட்டைகள் அனுப்பிவைக்கும் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

இதேவேளை தபால்மூலம் வாக்களிப்பவர்கள் எதிர்வரும் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் தமது வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்கக்கூடிய ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதால் அத்தினத்தில் அவர்கள் வாக்களிக்கமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் யாழ்.மாவட்ட வாக்களிப்பு நிலையங்களில் சிரேஷ்ட தலைமை தாங்கும் அதிகாரிகளாகக் கடமையாற்றவுள்ள அலுவலர்களுக்கான இரு நாள் பயிற்சிப்பட்டறை எதிர்வரும் திங்கட்கிழமையும், செவ்வாய்க்கிழமையும் நான்கு அமர்வுகளாக இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## அரசியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

புதிய ஜனநாயகக் கட்சி நடத்தும் 'பொதுத்தேர்தலும், அரசியல் நிலைமைகளும்' எனும் கருத்தரங்கு நாளை பிற்பகல் 3.30 மணிக்கு ஸ்ரான்லி வீதியிலுள்ள அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எஸ்.நவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் கே.செந்திவேல், எஸ்.தேவராசா, கே. கதிர்காமநாதன், கே.தணிகாசலம் ஆகியோர் கருத்துரைகள் வழங்கவுள்ளனர்.

# மோட்டார் சைக்கிள் மோதி இளைஞர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஆரியகுளம் சந்திப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்தவர் சைக்கிளில் வந்தவரை மோதிவிட்டுத் தப்பிச்சென்றுள்ளார்.

இச்சம்பவத்தில் காயமடைந்த கோப்பாய் தெற்கு இருபாலையைச் சேர்ந்த பா.பிரதீபன் (வயது 25) என்பவர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வியாபாரியான இவர் தனது சொந்தக்கடமையின் நிமித்தம் ஆரியகுளம் சந்திப்பகுதியில் சென்று கொண்டிருந்தபோதே எதிரில் வந்த மோட்டார் சைக்கிள் அவரை மோதிவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப-121)

# பெண்கள் எழுச்சி நிகழ்வும் வேட்பாளர் அறிமுகமும்

(யாழ்ப்பாணம்)

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பெண் வேட்பாளரான பத்மினி சிதம்பரநாதனை அறிமுகஞ் செய்யும் நிகழவும், பெண்கள் பண்பாட்டு மையத்தினரின் பெண்கள் எழுச்சி நிகழ்வும் இன்று காலை 11 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பெண்கள் பண்பாட்டு மையத்தின் இணைப்பாளர் கிருஷ்ணவேணி தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி வாழ்த்துரை வழங்குவார். அறிமுக உரையை இணைப்பாளர் சிவரதி ராஜ்குமார் நிகழ்த்துவார்.

'தேசிய எழுச்சியில் பெண்களின் பங்கு' என்ற பொருளில் தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.தமிழினி நிகழ்த்த, கருத்துரையினை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பெண் வேட்பாளர் பத்மினி சிதம்பரநாதன் வழங்குவார்.

# தேர்தல் கடமைகள்குறித்த கையேடு விநியோகம்!

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினரால் நாடுமுழுவதும் தேர்தல் குறித்த கையேடு மக்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டுவருகிறது.

இக்கையேடு யாழ்.மாவட்டத்திலும் விநியோகிக்கப்பட்டுவருகிறது. 'தேர்தலைப்பற்றி நீங்கள் அறிய வேண்டியவை' எனும் தலைப்பிலான கையேடு விநியோகிக்கப்பட்டுவருகின்றது.

இதில் வாக்காளர்களுக்கான உரிமைகள், பொலிஸார் தேர்தல் காலங்களில் மக்களுடன் நடந்துகொள்ளவேண்டியமுறை, பொலிஸாரின் கடமைகள் மற்றும் வேட்பாளர்களின் கடமைகள், வாக்களிக்கும்போது மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குமுறைகள் பற்றியும் இந்தக் கையேட்டில் விளக்கப்பட்டுள்ளது.

இக்கையேடுகளை யாழ்.சுண்டிக்குளிப்பகுதியில் உள்ள சோமசுந்தரம் அவனியூவில் இயங்கும் யாழ். மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)


உங்கள் இசை ஆவல்களைப் பூர்த்தி செய்ய எம்மிடம்
உலக நாடுகளின் டிஸ்கவரி CD'S
குழந்தைகளுக்கான நேசரிஸ் CD'S
CD க்களின் சங்கமம்
மற்றும் CD கவர், BLANK CD போன்றவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே நிறுவனம்:
Music World
T.P: 021 222 6554
பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
புதிய, பழைய VIDEO CD'S
புதிய, பழைய இடைக்கால AUDIO CD'S
தமிழ், ஆங்கில DVD
அனைத்து வகையான MP3 CD'S
கர்நாடக சங்கீத CD'S
இந்து, கிறிஸ்தவ பக்திபாடல் CD'S
SOFT WARE, GAMES CD'S
(சி-2330)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் அதன் கடல்வள அபிவிருத்தி நிலையமூடாக, இரண்டு ஆண்டுகால மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறியொன்றை இவ்வாண்டுமுதல் நடத்தத் தீர்மானித்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக யாழ்.பல்கலைக்கழகம் நடத்திவந்த ஒருவருடகால மீன்பிடியியல் டிப்ளோமாவை பூர்த்திசெய்தவர்களுள் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு குறிப்பிட்ட தொகையினருக்கு, மேலும் ஒரு ஆண்டு பயிற்சியளிப்பது மூலம், புதிதாக அறிமுகப்படுத்தப்படும் இரு ஆண்டு மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமாவைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பளிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாய்ப்பு இவ்வாண்டு மட்டுமே வழங்கப்படும் கற்கைநெறி 2004/05/10 அன்று தொடங்கி ஓராண்டுகாலம் நடைபெறும்.

**கட்டண விபரம்:-**

**பதிவுக் கட்டணம் ரூபா 500/=**
**கற்கைநெறிக் கட்டணம் ரூபா 15000/=**
**மீளப்பெறக்கூடிய வைப்பு ரூபா 500/=**

கற்கைநெறிக் கட்டணம் முழுமையாக அல்லது இரண்டு தவணைகளில் சமபங்குகளாக -ஒன்று பதிவு மேற்கொள்ளும்பொழுதும், மிகுதி இரண்டாம் அரையாண்டு ஆரம்பிப்பதற்கு முன்பும் செலுத்தப்படவேண்டும்.

யாழ்.பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட ஒருவருட மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறியில் சித்திபெற்றவர்கள் எவரும் இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம். தெரிவு திறமை அடிப்படையில் அமையும்.

விண்ணப்பப்படிவங்களை - யாழ்.பல்கலைக்கழக பரீட்சைகளும் அனுமதிக்குமான உதவிப் பதிவாளர் பிரிவில் 50/= கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் - உதவிப்பதிவாளர், விஞ்ஞானபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்கு 2004/04/16 அன்று அல்லது அதற்குமுன்னர் அனுப்பப்படல் வேண்டும்.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(சி-2332)


திறைஞ்சனாஸ் சங்கானை
மக்கள் திலகம் எம்.ஜி.ஆர், லதா, மஞ்சுளா நடித்த
நேற்று இன்று நாளை (புத்தம் புதிய பிரதி)
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00,(பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)
STY KIDS - 2
(சி-2262)



ராஜா யாழ்ப்பாணம்.
சூர்யா, த்ரிஷா நடித்த
மௌனம் பேசியதே



10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சி-2263)


### சிறு விளம்பரம்

**வீடு விற்பனைக்கு**

சாவகச்சேரி சங்கத்தானை கண்டி வீதிக்கு அண்மையாக 4½ பரப்புக் காணியுடன் வீடு, கிணறு, மலசல கூடம் ஆகிய வசதிகளுடன் (வீட்டுக்கு திருத்தவேலை தேவை) வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 0112719566 (667)


யசோ இறபர் ஸ்டாம்
75/=
பொலிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே
யசோ (PVT) லிமிட்டட்,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/2152)



எம்மை நாமே ஆளவேண்டும்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
எமது இனத்தின் பெருந்தலைவர்கள் கண்ட கனவுகள், சோரம்போகாத எமது இன்றைய தலைமையில் நனவாக,
கூட்டுறவாளர்களைக்கொண்ட
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை
வீட்டுச் சின்னத்திற்கு புள்ளடிபோட்டு 13 ஆவது நாடாளுமன்றத்தில் அமர உழைப்போம்.
தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்.
கட்டைவேலி - நெல்லியடி
ப.நோ.கூ.சங்கம்.
கரவெட்டி.
(சி-2331)

# அனைவரும் ஏகோபித்த குரலை தேர்தலில் வெளிப்படுத்த வேண்டும்!



## புதுவை இரத்தினதுரை பேச்சு

எமது விடுதலைப் போராட்டம் ஓய்ந்துவிடுமா? அல்லது தொடருமா என எல்லோரும் எதிர்பார்த்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் மக்கள் அனைவரும் தமது ஏகோபித்த குரலை இத்தேர்தல் மூலம் வெளிப்படுத்தவேண்டும் என தமிழீழ விடுதலைப்புலிகளின் கலைபாண்பாட்டுக் கழகப்பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.

நல்லூர் - நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற - போராளிக் கவிஞர் அம்புலியின் 'மீண்டும் துளிர்க்கும் வசந்தம்' கவிதைத் தொகுதி அறிமுக விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து, உரையாற்றுகையில்-

அவர், எதிர்வரும் தேர்தலில் நீங்கள் அனைவரும் கட்டாயம் வாக்களிக்கச் செல்லவேண்டும். வீட்டுச் சின்னத்திற்கே வாக்களியுங்கள். நாங்கள் வாக்களியுங்கள் என்று கூறவில்லை. அது உங்கள் விருப்பம்.

எமது வாக்களிக்கும் சதவீதம் குறையுமானால் நாம் விரும்பத்தகாதவர்கள். நாடாளுமன்றம் செல்லக்கூடிய ஆபத்து இருக்கின்றது.

உங்களது கடமை இவர்களை நாடாளுமன்றம் அனுப்பவேண்டியதாகும்.

இந்தத் தேர்தல் சிலருக்கு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுப்பதற்காக அல்ல. இத்தனை வலிகளைச் சுமந்து வளர்ச்சி பெற்ற எமது போராட்டம் இந்தத் தேர்தல் மூலம் கலைந்துபோகக்கூடாது. இதை நாம் கவனத்தில் எடுக்கவேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா மிகவும் சாதுரியமாகவே இந்த அரசியல் யாப்பை எழுதி உள்ளார்.

நாம் 85 வீதமான வாக்குகளைப் பெறத்தவறுவோமானால் அது ஆபத்தாகும். இதுவரையில் வன்னிப் பெருநிலத்தின் வாக்குகளுக்கு என்னவாகும் என்று தெரியாது. எனவே கட்டாயம் இந்தத் தேர்தலில் நீங்கள் வாக்குகளைப் பயன்படுத்துங்கள்.

கிழக்கு மாகாணப் பிரச்சினை பற்றிப் பெரிதுபடுத்தாதீர்கள், மிகக் கெட்டித்தனமாக எங்கள் அமைப்புக்குள்ளே நுழைந்துள்ளார்கள். மிகவும் சரியான சந்தர்ப்பத்தில் எமது தொண்டைக் குழியைப் பிடித்துள்ளார்கள்.

கடந்த இரண்டு வருடங்களில் நாம் உரத்துக் கூறியது என்ன? தமிழர் தாயகத்தைக் கூறுபோடமுடியாது என்று கூறினோம்.

மற்றது, ஓர்நிர்வாக அலகைக் கேட்டோம். இவை இரண்டையும் தான் இன்று எமக்கு எதிரான சர்வதேச ஊடகங்கள் கருணா கூறியதாகக் கூறுகின்றன. ஆனால, எவரும் கலங்கத் தேவையில்லை. அன்னை பூபதி அம்மா தனது தலைவர்-பிரபாகரன் என ஏற்றுக்கொண்டு, உண்ணாவிரதமிருந்த பூமி மட்டக்களப்பு.

நெற்றியிலே திலகமிட்டு, தம் பிள்ளைகளைக் களம் அனுப்பிய பூமி மட்டக்களப்பு. இப்படியான மட்டக்களப்பினை கலக்கமுடியாது. பிரபாகரன் இந்தத் தடையையும் தாண்டுவார். எனவே, நாங்கள் கலங்கத்தேவையில்லை எனத் தெரிவித்தார்.

## ஹிக்கடுவைக்கு பிரதமர் திடீர் விஜயம்

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளால் இலங்கையின் உல்லாசப் பிரயாணத் தொழிற்துறையில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சி குறித்து ஆராய்வதற்காக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஹிக்கடுனவ பகுதிக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

சமாதானச் செயற்பாடுகளின் பயனாக இலங்கைக்கு அதிகளவில் உல்லாசப் பயணிகள் வருகை தருகின்றனர். இதனால், உல்லாசப் பயணத்துறை தொடர்பாக பல்வேறுபட்ட முதலீடுகளில் வர்த்தகர்கள் ஈடுபட்டுள்ளனர் என, அர சாங்க ஊடகப் பேச்சாளர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேர்தல் அலுவலர்களை ஆணையாளர் சந்தித்தார்

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை நீதியாகவும், நேர்மையான முறையிலும் நடத்துவது குறித்தும், வடக்கு - கிழக்கு புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள மக்களின் வாக்களிப்பு தொடர்பாகவும, தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க நேற்றுமுன்தினம் உதவித் தேர்தல் ஆணையாளர்கள் மற்றும் தேர்தல் தெரவத்தாட்சி அலுவலர்கள் ஆகியோருடன், சந்திப்பொன்றை நடத்தியுள்ளார்.

இவ்வாறு தேர்தல் அதிகாரிகளுடன் தேர்தல் ஆணையாளர் கலந்துரையாடுவது இது இரண்டாவது முறையாகும்.

இதனிடையே வாக்காளர் அட்டைகள் வழங்கும் பணிகள் நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பமாகியுள்ளன.

இது எதிர்வரும் 26 ஆம் திகதியுடன் முடிவடையவேண்டும்.

இதேவேளை, அரசியற்கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் தமது தேர்தல் பிரசார நடவடிக்கைகளை வேகப்படுத்தியுள்ளன. இது அடுத்த 15 நாட்களுக்குள் சுறுசுறுப்பாக நடைபெறும். பிரதான அரசியற் கட்சிகள் தமது தேர்தல் பிரசார நடவடிக்கைகளை இலத்திரனியல் ஊடகங்கள் மூலமாகவும், பத்திரிகைகள் வாயிலாகவும் மேற்கொண்டுவருகின்றன.

## 'ஊடகவியலுக்கு ஓர்அறிமுகம்' பயிற்சிப் பட்டறை

ஊடகவியலுக்கு ஒரு அறிமுகம் எனும் பயிற்சிப் பட்டறை இன்றும், நாளையும் யாழ்ப்பாணம் சிற்றி ஹோலில் நடைபெறவுள்ளது.

இன்று நடைபெறவுள்ள கருத்தரங்கில் எழுத்துப் பணியில் ஆசிரியத்துவத்தின் ஆளுமை, தொடர்பாக சென்.சாள்ஸ் மகாவித்தியாலய அதிபர் திருமதி எவ.சின்னத்துரை கருத்து வழங்கவுள்ளார். பத்திரிகையாளரின் பணியும் செய்தி அறிமுகம் தொடர்பாக யுனெஸ்கோ ஆலோசகர் செ.அருட் செல்வம் விளக்கவுள்ளார். நாளை நடை பெறவுள்ள நிகழ்வில் காட்சி ஊடகங்கள் பற்றிய அறிமுகத்தை யாழ். பல்கலைக் கழக ஊடக பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த எஸ். ரகுராம் வழங்குவார்.

# அரச ஊடகவியலாளர்கள் அனைவரும் பதவிகளிலிருந்து விலக வேண்டும்!

## வண.கொலன்னாவ சுமங்கள தேரோ தெரிவிப்பு

(கொழும்பு)

மதத்திற்கெதிராகவும், தேசத்திற்கெதிராகவும் பிரசாரம் செய்வதை நிறுத்தி அரச ஊடகவியலாளர்கள் அனைவரும். அரச நிறுவனங்களிலிருந்து தமது பதவிகளை இராஜினாமாச் செய்யவேண்டும்.

இவ்வாறு ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய ஒருங்கிணைப்பாளர் வண கொலன்னாவ சுமங்கள தேரோ தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

அரச ஊடகங்கள் அனைத்தும், மற்றவர்களை தேவையற்ற விதத்தில் குற்றம் சாட்டுவதிலேயே உள்ளன. இவ்வாறு, தேவையற்ற விதத்தில் குற்றம் சாட்டப்பட்டது தொடர்பான பதிலை இந்த ஊடகங்கள் தெரிவிப்பதற்கு கால அவகாசத்தை ஹெல உறுமயவின் உறுப்பினர்கள் கொடுப்பார்கள்.

சில அரசியல்வாதிகள் எமது கட்சியிலிருந்து வேட்பாளரை ஐம்பது மில்லியன் கொடுத்து வாங்குவதற்கு முயற்சிசெய்கின்றனர்.

அத்துடன், மகாநாயக்க தேரோ மற்றும் அஸ்கிரிய தேரோ இருவரையும் தாம் அண்மையில் சந்தித்தபோது, அவர்கள் தமக்கு ஆசிவழங்கியதாகவும் ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரான வண உடுவே தம்மலோக தேரோ தெரிவித்தார்.

## விவசாய நடவடிக்கைகளுக்கான

# கடன்களுக்குச் சலுகை; அரசாங்கம் தீர்மானம்!

விவசாய நடவடிக்கைகளுக்கு கடன்களை பெற்று அதனை மீளச் செலுத்துவதில் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ள விவசாயிகளுக்கு பல சலுகைகளை வழங்க அரசாங்கம் முன்வந்துள்ளதாக அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்:

குறைந்த வட்டியுடன் நீண்டகாலக் கடன்களை வழங்கத் தாம் தீர்மானித்துள்ளோம், கடன்வழங்கத் தீர்மானித்த கால எல்லையை ஐந்து மடங்கினால் அதிகரிக்கவும், வட்டி வீதத்தை எட்டு வீதத்திலிருந்து நான்கு வீதமாக குறைக் கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதேபோல், முற்றாக அறுவடையைச் செய்ய முடியாது போகும் சந்தர்ப்பத்தில் விவசாயிகளிடமிருந்து வட்டியை அறவிடாது இருக்கவும் தீர்மானித்திருப்பதாக அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

## தேர்தல் பணியில் 63 ஆயிரம் பொலிஸார்

ஏப்ரல் 2 ஆம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலின்போது, 63 ஆயிரம் பொலிஸார் தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தப்பட உள்ளதாக பொலிஸ்மா அதிபர் இந்திர டீ சில்வா தெரிவித்தார்.

இவர்களது பணிகள் எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது. 6483 பேர் ரோந்து நடவடிக்கைகளிலும், 21 ஆயிரம் பேர் வாக்குச்சாவடிகளிலும், 8250 பேர் சோதனைச் சாவடிகளிலும், வாக்கு எண்ணும் இடங்களில் 2800 பேரும், பொலிஸ் நிலையங்களில் 5993 பேரும் கடமையிலீடுபடுவார்களெனவும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

இத்துடன், 18474 விசேடபடையினர் முக்கிய அரசியல்வாதிகளின் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

மேலும், கடந்த காலத் தேர்தல்களுடன் ஒப்பிடும்போது இந்த முறை தேர்தல் வன்முறைகள் குறைந்து காணப்படுவதன் காரணம் தேர்தல் தொடர்பான சட்டங்கள் ஆணையாளராலும், பொலிஸாராலும் உரிய முறையில் கடைப்பிடிக்கப்பட்டமையே என அவர் மேலும் தெரிவித்தார். (01)

## கலைஞர்கள், விளையாட்டு வீரர்களை ஜனாதிபதி சந்திரிகா சந்தித்ததற்கு ஐக்கிய தேசிய முன்னணி கண்டனம்!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சில தினங்களுக்கு முன்னர் இலங்கையின் முன்னணிக் கலைஞர்கள், விளையாட்டு வீரர்களைச் சந்தித்து, விபரமாக உரையாடியதுடன், இரவுணவும் வழங்கியிருந்தார்.

இந்தச் சந்திப்பு தேர்தல் பிரசார நோக்கம் கொண்ட ஒன்று என்று ஐ.தே.மு. உட்பட பல கட்சிகளும் விசனம் தெரிவித்தன.

இதை மறுத்துள்ள ஜனாதிபதி செயலகம், வழமையான ஜனாதிபதியின் செயற்பாட்டில், நாட்டின் முன்னணிக் கலைஞர்கள், விளையாட்டு வீரர்கள், பிரதான அரசியற் பிரமுகர்கள், வர்த்தகர்கள் போன்றோரை இடையிடையே சந்தித்து, நாட்டின் நிலைமை குறித்து விரிவாக ஆராய்வது உள்ளடங்கும் என்றும், அதன் ஒரு அங்கமாகவே இச்சந்திப்பும் இடம்பெற்றது என்றும் செயலகம் விளக்கமளித்துள்ளது.

இதற்கிடையே, இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட பிரபல சினிமா நடிகை அனோஜா வீரசிங்க, இந்தச் சந்திப்பில் தான் கலந்துகொண்டிருப்பதை வைத்து, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு தனது ஆதரவை வழங்கியதாக ஜனாதிபதி சார்பில் ஒருவர் தெரிவித்திருப்பதை வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இச்சந்திப்பில் கலந்துகொள்ளும்படி அழைப்பு விடுக்கப்பட்டதுமே, தான் ஜனாதிபதி செயலகத்துடன் தொடர்பு கொண்டு, இதற்கு அரசியல் காரணமெதுவும் உண்டா என்று பலதடவை விசாரித்ததாகவும், இது முற்றாக அரசியலற்ற ஒரு பொதுச் சந்திப்பு என்று உறுதி வழங்கப்பட்டதால் மட்டுமேதான் இதிலே, கலந்துகொண்டதாகவும் தெரிவித்துள்ள நடிகை அனோஜா, தான் ஐ.ம.சு. முன்னணியின் கொள்கையை எந்தவிதத்திலும் ஆதரிக்கவில்லை என்றும், இத்தகைய விசமப் பிரசாரம் தனக்கு ஆச்சரியமளிப்பதாகவும் தெரிவித்தார்.




தேசிய சமாதானப் பேரவையும் - சேவாலங்கா மன்றமும் இணைந்து வவுனியாவில் நடத்திய மக்கள் கருத்தறியும் நிகழ்வின் ஆரம்ப நிகழ்வைப் பேரவையின் அமைப்பாளர் எஸ்.பி.நாதன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். (03)

# வடக்கின் பெரும்போர் இன்று இறுதியாட்டம்

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில், நடைபெற்றுவருகின்ற, வடக்கின் பெரும்போர் என வர்ணிக்கப்படும், கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாள் ஆட்ட முடிவின்போது, யாழ். மத்திய கல்லூரி தனது இரண்டாவது இனிங்சில் 2 விக்கெட்டு இழப்பிற்கு, 98 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

நேற்றுக் காலை 4 விக்கெட் இழப்பிற்கு 88 ஓட்டங்களினைப் பெற்றுள்ள நிலையில் ஆட்டத்தை ஆரம்பித்த சென்.ஜோன்ஸ் கல்லூரி தனது முதலாவது இனிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து, 93 ஓவர்களும் 2 பந்துகளும் விளையாடி, 210 ஓட்டங்களினைப் பெற்றுக்கொண்டது. இதில் அன்புஜன் 27, சகிந்தன் 16, கிருஸ்ணகுமார் 44, தினேஷ் 66, ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில், யாழ்.மத்திய கல்லூரி அணியின் சார்பில், ரஜீவ்குமார் 36 ஓவர்கள் பந்துவீசி, 69 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களையும், அணித்தலைவர் மதூஷன் 33 ஓவாகள் பந்துவீசி 56 ஓட்டங்களைக் கொடுத்து, 2 விக்கெட்டுக்களையும், சியாம்ராஜ் 11 ஓவர்கள் பந்துவீசி 26 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து, ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினார்கள.

யாழ். மத்திய கல்லூரி அணியிலும் பார்க்க 109 ஓட்டங்களினைக் கூடுதலாக சென்ஜோன்ஸ் கல்லூரி பெற்றிருந்தது, இரண்டாவது இனிங்சினை ஆட ஆரம்பித்த யாழ். மத்திய கல்லூரி அணி, ஆட்டநேர முடிவின் போது, 44 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 98 ஓட்டங்களினைப் பெற்றுள்ளது. இதில், றோகான் 48 ஓட்டங்களினையும், ஆட்டமிழக்காமல் ஜசிந்தன் 21 ஓட்டங்களினையும், கபில்தேவ் 12 ஓட்டங்களினையும், பெற்றுக்கொடுத்தனர். சென்ஜோன்ஸ் அணியின் சார்பில் அன்ரூ, நவகீதன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டினை கைப்பற்றினர். (58)

# நியூஸிலாந்தின் பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சுருண்டது!



நியூஸிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் ஒக்லன்டில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாளான நேற்று, ஆட்டநேரமுடிவில் நியூஸிலாந்து தனது முதல் இன்னிங்சில் 3 விக்கெட்டுக்களை இழந்து 201 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாக முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 231 ஓட்டங்களைப் பெற்று மிகவும் பலமான நிலையில் இருந்த தென்னாபிரிக்க அணி நேற்று மேலதிகமாக 65 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து இக்கட்டான நிலைக்குள் தள்ளப்பட்டது. இதன் மூலம் தென்னாபிரிக்க அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 296 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இந்த அணி சார்பாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ஸ்மித் 88, கிப்ஸ் 80 ஓட்டங்களைப் பெற்று நல்ல அடித்தளத்தை இட்டுக் கொடுத்திருந்த போதிலும், மற்றைய வீரர்கள் எவரும் நிலைத்து நின்று ஆடாததே இதற்குக் காரணமாகும்.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் இருவரையும் விட, ஜக்கலிஸ் 40, மக்கன்ஸி 27, றுடோல்ப் 17 ஓட்டங்களை கூடுதலாகப் பெற்றனர். மற்றைய 3 வீரர்கள் பத்துக்கு குறைந்த ஓட்டங்களையும், 2 வீரர்கள் ஓட்டமெதுவும் பெறாமலும் ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் நியூஸிலாந்து அணிக்கு மீள அழைக்கப்பட்ட கிறிஸ் மார்ட்டின் 6 விக்கெட்டுக்களையும், ஓரம் 2 விக்கெட்டுக்களையும், ரபி, கெயின்ஸ் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதலாவது இனிங்ஸை விளையாடும் நியூஸிலாந்து நேற்றைய ஆட்ட முடிவின் போது 3 விக்கெட்டுக்களை இழந்து 201 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இந்த அணி சார்பாக றிச்சட்சன் 45, ஸ்ரைஸ், மக்கலம் இருவரும் ஆட்டமிழக்காமல் முறையே 118, 31 ஓட்டங்களைப் பெற்றுள்னர்.

பந்துவீச்சில் ஷோன் பொலக், என்ரினி, கலிஸ் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களை கைப்பற்றியுள்ளனர்.

இந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விளையாடியதன் மூலம் ஹரி கோர்ஸ்டன் நூறு டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய முதல் தென்னாபிரிக்க வீரர் என்ற பெருமையைப் பெறுகிறார்.

அத்துடன், இந்தப் போட்டியில் கைப்பற்றிய ஒரு விக்கெட்டின் மூலம் மொத்தம் 330 விக்கெட்டுக்களை டெஸ்ட் விக்கெட்டுக்களில் தென்னாபிரிக்கப் பந்துவீச்சாளர்களில் ஷோன் பொலக் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

இதேவேளை, இந்த டெஸ்டில் சதமொன்றைப் பூர்த்தி செய்வதன் மூலம் கிரிக்கெட்டின் கடவுள் டொன் பிரட்மன் தொடர்ந்து பெற்ற ஆறு சததத்தை சமன் செய்வார் என அனைவரும் எதிர்பார்த்திருந்தபோதும் கலிஸ் அனைவரையும் ஏமாற்றிவிட்டார்.

# விளையாட்டு

## நேற்றைய காட்சிப் போட்டியில் ஜனசக்தி அழைப்பு அணிவெற்றி

இலங்கையின் தேசிய அணியில் இடம் பெற்ற வீரர்களினைக் கொண்ட ஜனசக்தி அழைப்பு அணிக்கும், யாழ்.மத்தியகல்லூரி, சென்ஜோன்ஸ் கல்லூரி பழையமாணவர்கள் அணிக்கும் இடையில் யாழ்.மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்ற காட்சி கிரிக்கெட் போடடியில் ஜனசக்தி அழைப்பு அணி வெற்றி பெற்றது. 4 ஓவர்களைக் கொண்ட மேற்படி கிரிக்கெட் போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய ஜனசக்தி அழைப்பு அணியினர் ஒரு விக்கெட் இழப்பிற்கு 73 ஓட்டங்களினைப் பெற்றனர். இதில் றொஷான் மகாநாம 16, வுந்திக்க கத்துருசிங்க ஆட்டம் இழக்காமல் 31 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பழைய மாணவர் சங்க அணியினர் 4 ஓவர்களில் 2 விக்கெட் இழப்பிற்கு 32 ஓட்டங்களை மட்மே பெற்றனர். இதனால், ஜனசக்தி அழைப்பு அணியினர் 41 ஓட்டங்களால் வெற்றிபெற்றனர்.

பழைய மாணவர் சங்க அணியில் யாழ்.மத்தியகல்லூரி அணிக்கு கடந்த காலங்களில் தலைமை தாங்கிய 3 வீர்களும் செனஜோன்ஸ் கல்லூரி அணிக்கு தலைமை தாங்கிய 3 வீரர்களும் இடம்பெற்றிருந்தனர்.

ஜனசக்தி அழைப்பு அணியில் இலங்கை தேசிய அணியில் இடம்பெற்ற றொசான் மகாநாம தலைமையில் வுந்திக்க கத்துருசிங்க, றுச்சித்த பெரேரா, நிறோசன் பண்டாரதிலக, ரங்கடயன், ஜெரிபவுட்டஸ் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். (58)

# இரண்டாவது டெஸ்ட்டை வெல்வதற்கு இலங்கை அணிக்கு 51 ஓட்டங்கள் தேவை




இலங்கை - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் கண்டி அஸ்கிரிய மைதானத்தில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் நான்காம் நாளான நேற்று இலங்கை அணி தனது இரண்டாவது இனிங்சில் 7 விக்கெட்டுக்களை இழந்து 301 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. முன்னதாக நேற்று முன்தினம் ஆட்ட நேரமுடிவின்போது 5 விக்கெட்டுக்களை இழந்து 320 ஓட்டங்களைப் பெற்றிருந்த அவுஸ்ரேலிய அணி நேற்றைய ஆட்டத்தில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 442 ஓட்டங்களைப்பெற்றது.

இந்த அணி சார்பாக கில்கிறிஸ்ட் 144 ஓட்டங்களையும், மார்டின் தனது டெஸ்ட் கிரிக்கெட்டில் கூடுதலாக 161 ஓட்டங்களையும், லீமன் 21, பொண்டிங் 27, சைமன்ட்ஸ் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் முரளிதரன் 5விக்கெட்டுக்களையும், சமிந்தவாஸ் 3 விக்கெட்டுக்களையும், சொய்சா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

352 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில், தனது இரண்டாவது இனிங்ஸைத் தொடங்கிய இலங்கை அணி நேற்றைய தனது ஆட்ட நேர முடிவின் போது 7 விக்கெட்டுக்களை இழந்து 301 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இலங்கை அணி சார்பாக சனத் ஜெயசூரிய 131 ஓட்டங்களையும் (இது இவரது 11 ஆவது டெஸ்ட் சதமாகும்) சங்ககார 29, டில்ஷான் 43, சமிந்தவாஸ், லொக்கு ஆராய்ச்சி இருவரும் ஆட்டமிழக்காமல் முறையே 30,13 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர்.

இலங்கை அணி இன்னமும் 51 ஓட்டங்கள் எடுத்தால் அவுஸ்ரேலிய அணிமுன்னர் வென்ற முதலாவது டெஸ்ட் தொடரை 1:1 என்ற நிலையில் சமப்படுத்தலாம்.

பந்து வீச்சில் ஷேன்வோன், ஜிலெஸ்பி இருவரும் தலா மூன்று விக்கெட்டுக்களையும், கஷ்பிரோவிஷ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

# பாகிஸ்தான் நான்கு விக்கெட்டுகளால் இந்திய அணியைத் தோற்கடித்தது!

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நேற்று பெஷாவரில் நடந்த மூன்றாவது சர்வ தேச ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் 4 விக்கெட்டுக்களால் இந்தியாவைத் தோற்கடித்தது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணித்தலைவர் இன்ஸமாம் உல்ஹக் இந்திய அணியைத் துடுப்பெடுத்தாட அழைத்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இந்திய அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி. ஆட்டத்தின் இரண்டாவது ஓவரிலேயே இந்தியா தனது நட்சத்திர ஆட்டக்காரர் டெண்டுல்கரை இழந்தது.

அதன்பின் இந்திய அணியின் முக்கிய விக்கெட்டுக்களான ஷேவாக், லக்ஷ்மன் இருவரையும் இந்திய அணி சொற்ப ஓட்டங்களுக்குள் இழந்தது.

இதன்பின் அணித்தலைவர் கங்கூலி, ராவிட் இருவரும் நிதானமாக விளையாடி ஓட்டங்களைப் பெற்றபோதும், பாகிஸ்தான் பந்து வீச்சாளர்கள் இவர்களை நிலைத்து நின்று ஆடவிடவில்லை.

இறுதியில் இந்திய அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 244 ஓட்டங்களை 50 ஓவர்களின் நிறைவில் பெற்றது.

இந்திய அணி சார்பாக யுவராஜ்சிங் 65, கங்கூலி 39, ராவிட் 33, பாலாஜி 12 பந்துகளில் 3 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் அடங்கலாக 21 ஓட்டங்களைப் பெற்ற அதேவேளை, டெண்டுல்கர் ஓட்டமெதுவும் பெறாமலும் ஷேவாக் 13, லக்ஸ்மன் 3 ஓட்டங்களும் பெற்றனர்.

பந்துவீச்சில் அக்தார், மொகமட் சமி இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும், சபீர் அகமட் 3 விக்கெட்டுக்களையும், அப்துல் ரஷாக், சொகைப் மலிக் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய பாகிஸ்தான் அணி, தனது முக்கிய துடுப்பாட்ட




வீரர்களான சஹீட் அப்ரிடி, யுகானா இருவரையும் ஆரம்பத்திலேயே இழந்தது.

இருந்தும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான யசீர் ஹமீட் சிறப்பாக துடுப்பெடுத்தாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்த உதவினார். இதன்பின் வந்த அப்துல் ரஸாக் அதிரடியாக ஆடி அணியினை வெற்றிக்கு இட்டுச் சென்றார்.

இந்த அணி சார்பாக யசீர் ஹமீட் 98, இன்ஸமாம் உல்ஹக் 28, அப்துல் ரஸாக் 52 பந்துகளில் 7 பவுண்டரிகள் அடங்கலாக 53 ஓட்டங்களையும், மொயின்கான் 22 ஓட்டங்களையும் பெற்றனர். யுகானா மற்றும் சொகைப் மலிக் இருவரும் தலா இரண்டு ஓட்டங்களையும், யுனுஸ்கான் 18 ஓட்டங்களையும் சஹீட் அப்ரிடி 6 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அசிஷ் நெஹ்ராவிற்கு பதிலாக நேற்றைய போட்டியில் இணைக்கப்பட்ட இர்பான் பதான் 3 விக்கெட்டுக்களையும், சகீர் கான், டெண்டுல்கர் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

நடந்து முடிந்த மூன்று போட்டிகளில் பாகிஸ்தான் 2:1 என்ற நிலையில் வென்று முன்னிலையிலுள்ளது. இரு அணிகளுக்குமிடையிலான நான்காவது போட்டி நாளை லாகூரில் பகல் இரவு ஆட்டமாக நடைபெறவுள்ளது.

# சுதேசிய திருநாட் கொண்டாட்ட விளையாட்டுப் போட்டிகள்!

அரியாலை 85 வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு நடைபெறுகின்ற விளையாட்டுப் போட்டிகளின் இறுதி ஆட்டங்கள் அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு அரங்கில் நாளை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மாலை 2 மணிக்கு 16 வயதின் கீழான உள்ளூர் கிரிக்கெட் போட்டியில் போய்ஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து, ஜங்ஸ்ரார் விளையாட்டு கழகமும், மாவட்ட ரீதியிலான கிரிக்கெட் போட்டியில் ஸ்ரார் விளையாட்டு கழகத்தை எதிர்த்து பஷன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. திணைக்களங்களுக்கிடையிலான உதைப்பந்தாட்ட போட்டியில் மாவட்ட விளையாட்டுத் திணைக்களத்தை எதிர்த்து, மாநகர சபை விளையாட்டு கழகம் மோதவுள்ளது. மின்னொளி விளையாட்டாக மாலை 7 மணிக்கு உள்ளூர் கரப்பந்தாட்ட போட்டியில் அரியாலை சனசமூகநிலைய 'ஏ' அணியை எதிர்த்து, அரியாலை சனசமூக நிலைய 'பி' அணி மோதவுள்ளது. மாவட்ட ரீதியான கரப்பந்தாட்ட போட்டியில் கே.கே.எஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது என விளையாட்டுத்துறை செயலாளர் தெரிவித்தார்.

# ரூ.4500 கட்டணம் செலுத்தி கிரிக்கெட் பார்த்த முஷாரப்!

ராவல்பிண்டி மைதானத்தில் இந்திய - பாகிஸ்தான் இடையே நடந்த 2 ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியை அதிபர் முஷாரப் நேரில் சென்று முக்கிய விருந்தினர்களுக்கான இருக்கையில் அமர்ந்து பார்வையிட்டார்.

இதன்பின்னர் இஸ்லாமாபாத்தில் அதிபர் முஷாரப் இரு அணியினருக்கும் தேநீர் விருந்தளித்தார். அப்போது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைவர் ஷகார்யர்கானிடம் ராவல்பிண்டியில் கிரிக்கெட் போட்டியைக்காண விஐபிக்கான கட்டணம் எவ்வளவு என்று அதிபர் முஷாரப் கேட்டார். அதற்கு 4500 என்று அவர் கூறினார். உடனே அதிபர்4500 ஐ ஷகார்யர்கானிடம் தான் கிரிக்கெட் பார்த்ததற்கான கட்டணம் என்று கூறிக்கொடுத்தார்.

அதைப் பெற்றுக்கொண்ட ஷகார்யர்கான் நிருபர்களிடம் கூறும்போது, ராவல்பிண்டியில் முக்கிய விருந்தினராக கலந்துகொண்டு கிரிக்கெட் போட்டியை பார்த்த அனைவருமே டிக்கெட் வாங்கியது குறிப்பிடத்தக்கது.

பெஷாவர் நகரில் நடைபெறும் போட்டியைக்காண பிரதமர் 15 டிக்கெட்டுக்களை கேட்டுள்ளார். அதற்கான கட்டணத்தையும் கொடுத்துவிடுவதாகக் கூறியுள்ளார் என்றார்.

# குஞ்சுகள்

குருவிகளும் மனிதர்கள் போலத்தான். பெரிய குருவிகள் சலிப்பூட்டுபவை. எல்லா விடயங்களையும் பற்றிச் சளசளக்கும் - புத்தகங்களில் வருமே, அதே மாதிரி. குஞ்சுகளோ அவற்றை மதியா மல் தம்போக்கில் நடக்கும்.



ஒரு காலத்தில் மஞ்சள் அலகுக் குருவிக்குஞ்சு ஒன்று இருந்தது. அதன் பெயர் சின்னு. குளியலறை யன்னலின் மேல் வளைவில், சணற் கூளத்தையும், உலர்பாசியையும், மென்மையான வேறு பொருட்களையும் கொண்டு கட்டிய வெதுவெதுப்பான கூட்டில் அது வசித்தது. சின்னு பறந்து பார்க்கவில்லை. ஆனால், குஞ்சுச் சிறகுகளை அசைக்கும், கூட்டுக்கு வெளியே ஓயாமல் தலையை நீட்டும். இந்த உலகம் எப்படிப் பட்டது, நாம் வாழத் தகுந்தது தானா என்று தெரிந்துகொள்ள அதற்கு ஆசை.

'சின்னூ, என்ன ஆச்சு?' என்று கேட்டது அம்மாக்குருவி, சின்னு. சிறகுகளை அடித்து, 'சுத்துது, தலையை ஒரேயடியாச் சுத்துது!' என்று கீச்சிட்டது.



அப்பாக்குருவி பறந்து வந்து சின்னுவுக்கு ஒரு பூச்சியை ஊட்டி விட்டு, 'சூரன் தானே நான்?' என்று பெருமையோடு கேட்டது.

'சூரன்தான் படு சூரன்!' என்று மெச்சியது அம்மாக் குருவி.

சின்னுவோ, பூச்சியை விழுங்கிவிட்டு, 'கால்கள் முளைத்த பூச்சியை ஊட்டுவது. பெரிய சூரத்தனமோ? சிரிப்பு வருது?' என்று நினைத்துக் கொண்டது.

கூட்டுக்கு வெளியே மறுபடியும் தலையை நீட்டி இங்கும், அங்கும் உற்றுப்பார்த்த வண்ணம் இருந்தது.

'சின்னூ, சின்னூ? கவனம்! குப்புற விழுந்துவிடப் போகிறாய்!' என்று எச்சரித்தது அம்மாக் குருவி.

'குப்புறவா? எப்படி?' என்று கேட்டது சின்னு.

'எப்படியாவது செப்படியாவது! தரையில் விழுவாய். பூனை உன்னை 'லபக்'கென்று பிடித்து 'அவுக்'கென்று விழுங்கிவிடும்!' என்று சொல்லிவிட்டுப் ,பூச்சி வேட்டைக்குப் பறந்து போயிற்று அப்பாக் குருவி.



இப்படியே நாட்கள் கழிந்தன. சிறகுகளோ மெதுவாகத்தான் வளர்ந்தன.

ஒரு நாள் காற்று வீசியது.

'என்ன சீறுது? என்ன சீறுது?' என்று கீச்சிட்டது சின்னூ.

'காற்று உன்னை அடித்துத் தள்ளும். பொத்தென்று தரையில் விழுந்து பூனைக்கு இரைவாய்!' என்றது அம்மாக் குருவி.



சின்னுவுக்கு இது பிடிக்கவில்லை.

'இந்த மரங்கள் எதற்காக ஆடுகின்றன? ஆட்டத்தை நிறுத்தச் சொல்லு. அப்போது, காற்றும் அடிக்காது' என்று முணுமுணுத்தது.

விடயம் இப்படி இல்லை என்று சின்னுவுக்கு எடுத்துச் சொல்லிப் பார்த்தது அம்மாக்குருவி. ஆனால், சின்னு எல்லாவற்றையும் தன் மனப்படியே புரிந்துகொண்டது.

ஒரு குடியானவன் கைகளை ஆட்டியபடி குளியறை ஓரமாக நடந்தான்.

'இவனுடைய சிறகைப் பூனை பிச்சுப்போட்டிருக்கும். எலும்புகள் தான் மிச்சம்!' என்றது சின்னு.

'இவன் மனிசன். மனிசர்களுக்குச் சிறகுகள் கிடையாது!' என்று சொல்லிற்று அம்மாக்குருவி.



'ஏனாம்?'

'சிறகுகள் இல்லாமல் இருப்பது இவர்கள் இஷ்டம். கால்களால் தத்தித்திரிவார்கள் இவர்கள். தெரிந்ததா?'

'எதற்கு?'

இவர்களுக்குச் சிறகுகள் இருந்தால், இவர்கள் எங்களைப் பிடிப்பார்கள், அப்பாவும் நானும் பூச்சிகளைப் பிடிப்பதுபோல....'

'வெட்டிப் பேச்சு!' என்றது சின்னு. வெறுப் பேத்தல்! சிறகுகள் எல்லாருக்கும் இருக்கவேண்டும். தரையில் திரிவது மோசம். காற்றில் பறப்பது மேல்!... நான் பெரியவன் ஆனதும், எல்லாரும் பறக்கும் படி ஏற்பாடு செய்வேன்.'

சின்னு அம்மாவை நம்பவில்லை. அம்மாவை நம்பாவிட்டால் கேடு வரும் என்பது அதற்கு இன்னும் தெரியவில்லை.

அது கூட்டின் விளிம்பில் உட்கார்ந்து தானே மெட்டுக்கட்டிய பாட்டை உரக்கப்பாடிற்று.

*'அட சிறகில்லாத மனிசனே,*
*நடப்பாய் இரண்டு கால்களால்.*
*அடே பெரியவன் நீ, ஆனால்,*
*பொடுகுகள் உன்னைக்கடிக்குமே!*
*நானோ ரொம்பச் சின்னவன்,*
*ஆனால், தின்பேன் 'பூச்சிகளை.'*



இந்தப்பாட்டை அது மறுபடி மறுபடி பாடிற்று. திடீரென்று கூட்டிலிருந்து தவறி விழுந்துவிட்டது. அம்மாக்குருவி அதன் பின்னே பாய்ந்தது. தரையிலோ, பச்சைக் கண் பழுப்புப்பூனை பதிபோட்டுக் காத்திருந்தது

சின்னு திகில் அடைந்தது. சிறகுகளை விரித்து, சாம்பல் கால்களை ஊன்றி ஆட்டிக் கொண்டே,

'ச-ச-சலாம்! ச-ச-சலாம்!' என்று குழறியது.

அம்மாக்குருவி அதை ஒரு பக்கம் ஒதுக்கித் தள்ளிற்று. இறகுகளைச் சிலுப்பி, அலகைத் திறந்து, பூனையின் கண்ணை இலக்குப் பார்த்துப் பயங்கரமாகத் தாக்கிற்று.

'விலகு அப்பால் போ! பற சின்னூ, பறந்து யன்னல் மேல் இருந்து கொள் பற...'

அச்சம் குருவிக் குஞ்சை மேலே கிளப்பிற்று. சின்னு துள்ளிச் சிறகுகளை அடிக்கத் துவங்கிற்று, படிப் படியாக உயரே போய், யன்னல் மேல் உட்கார்ந்தது.



அம்மாவும் பறந்து வந்தது. அதன் வாலைக் காணோம். ஆனால், அதற்கு மகிழ்ச்சி பொங்கியது. சின்னுவின் பக்கத்தில் உட்கார்ந்து அதன் தலையை அலகால் வருடி,



'என்ன ஆச்சு, சின்னு?' என்று கேட்டது.

'ஆச்சாவது போச்சாவது! எல்லாத்தையும் எடுத்த எடுப்பிலேயே கத்துக்க முடியுமா என்ன?' என்று கொஞ்சியது சின்னு.

ஆக, எல்லாம் நல்லபடியாகவே முடிந்தது. பாவம், அம்மாக் குருவிக்குத்தான் வால் அறுந்துபோயிற்று. ✸

இங்கே மடிக்கவும்



# புனிதமானது கல்வி

கல்வி என்பது ஒரு சுவடு.
அதில் பேனா என்னும் ஒரு - ஆணி.
கல்வி கொடுக்க கொடுக்கப் பெருகும்.
ஆனால் குறையாது!
கல்வி இல்லாமல் மனிதன் இல்லை.
ஆனால் மனிதன் இல்லாவிடினும் கல்வி உண்டு.
கல்வி நீரினால் நனையாது தீயினால் எரியாது, கல்வி உள்ள மனிதன் அழிந்தாலும் அவனது கல்வி அழியாது.
கற்றவனுக்கு உலகெங்கும் சிறப்பு, செல்வம், வீரம் என்பவற்றைவிட கல்வி தான் மேல். கல்வி புனிதமானது. கல்விதான் சிறந்தது.

- நர்மதன் - தரம் - 8

# சொல் ஒன்று பொருள் இரண்டு

| | | |
|---|---|---|
| மாலை | - | மலர்கள் ஒன்றாய்ச் சேர்ந்தால் மாலை. மகிழ்வாய் விளையாடும் நேரம் மாலை. |
| ஆடு | - | அழகு தமிழில் பாடி ஆடு. அங்கே புல்லை மேய்வது ஆடு. |
| ஆறு | - | அழகாய்த் தண்ணீர் ஓடிடும் ஆறு. அன்புத் தோழி வயது ஆறு. |
| நாடு | - | நல்ல நண்பன் நட்பை நாடு. நமது நாடு இலங்கை நாடு. |

*ச.சக்தி தர்ஷினி - தரம் - 5*
*தமிழ் கந்தையா வித்தியாசாலை,*
*கந்தரோடை.*

# ஓவியப்போட்டி

சிறுவர்களே உங்கள் ஓவியங்களுக்குப் பரிசுதர எண்ணியுள்ளோம். உங்கள் கைவண்ணங்களை இன்னும் மெருகுடன் வரைந்து அனுப்புங்கள். இந்த ஓவியப்போட்டியில் பல விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதாவது, ஆண்டு 1-11 வரையான மாணவர்கள் இதில் பங்குபற்றலாம்.

நீங்கள் வரையும் ஓவியத்தில் நீர்வர்ணம், எண்ணெய் வர்ணம், கலர்ப் பென்சில் போன்றன பயன்படுத்தலாம்.

வெள்ளைத்தாளில் ஓவியத்தினை வரைந்து அனுப்பவும். அனுப்பும் ஓவியத்தின் தாளினை மடிக்காமல் அனுப்பவும். தட்டச்சுத்தாளின் (A4) இல் அமையவேண்டும். நீங்கள் வரைந்த ஓவியங்களை கீழ்வரும் கூப்பனைப் பூர்த்தி செய்து, அதனுடன் இணைத்து அனுப்பிவையுங்கள்.

தேர்ந்தெடுக்கப்படும் ஓவியங்கள் 3 இற்குப் பரிசுகள் வழங்கப்படும். அத்தோடு, 10 ஆறுதல் பரிசுகளும் உண்டு. நீங்கள் அனுப்பும் ஓவியங்களில் பரிசுக்குரிய ஓவியங்கள் - இளந்தேனீக்கள் கழகத்தினரால் நடாத்தப்படும் கண்காட்சியில் பார்வைக்காக வைக்கப்படும்.

முழுப் பெயர் :......................................
கற்கும் பாடசாலை :......................................
கற்கும் தரம் :......................................
வீட்டு முகவரி :......................................

.................... அதிபர்/ஆசிரியர் ஒப்பம் ........ திகதி .................... மாணவர் ஒப்பம்

ஓவியப்போட்டி
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

சிந்தனைக்கு!
நாம் வாழ
கல்வி வாழ
நாடு வாழ வேண்டும்.



# சிறுவர் அரங்கம்

**அன்புள்ள சிறுவர்களே!**

உங்களின் ஆக்கங்களான கதைகள், சுயசரிதைகள், கைவண்ணத்தில் வரையும் ஓவியங்கள் என்பன குறைவாகவேயுள்ளன. கூடுதலாகப் பொது அறிவும், விடுகதைகளும்தான் எழுதி அனுப்புகிறீர்கள். பொது அறிவுகளும், விடுகதைகளும் எழுதி அனுப்பத்தான் வேண்டும். ஆனால், வேறு ஆக்கங்களையும், நீங்களாகவே எழுதி அனுப்புவதற்கு முயற்சி செய்யுங்கள். கிறுக்கல்கள்தான் இன்றைய காலகட்டத்தில் வடிவமைக்கப்படுகின்றது. அகவே நீங்களும் ஏதாவது ஒன்றினை எழுதி, அதனை உங்களின் பாடசாலை ஆசிரியரிடம் காட்டி பிழையானதைச் சரிப்படுத்தி அனுப்பி வையுங்கள்.

நீங்கள் எழுதும் ஆக்கங்களைப் பிற மாணவர்களும் படிப்பதால் ஆர்வத்துடன் நல்லதைத் தெரிவுசெய்து அனுப்புவதற்கு முயற்சி செய்யுங்கள்.

பாசமுடன் - சாரு அக்கா

# பொன் மொழிகள்

- ☆ எழுந்து தைரியமாக நின்றால் உன் விதியை நீயே நிர்ணயிப்பாய்.
- ☆ நமது முன்னேற்றம் நாவடக்கத்தில் உள்ளது.
- ☆ விரைவில் உயர்வது பெரிதன்று எப்பொழுதும் உயர்ந்த படியே இருப்பதுதான் சிறந்தது.
- ☆ உண்மை மரணமற்றது. தவறு மரணமுடையது.
- ☆ இளமையிற் கற்கின்றோம். முதுமையில் புரிந்துகொள்கின்றோம்.
- ☆ செல்வத்தை விடுத்து கௌரவத்தை மாத்திரம் விரும்புபவன் உத்தமன்.
- ☆ உன்காலை நீயே கும்பிட்டுக்கொள்ளாதே.
- ☆ திட்டமிடாத செயல் யாவும் நட்டமே.
- ☆ இளமையில் முயற்சி முதுமையில் காக்கும்.
- ☆ நம் மனம் யாரிடம் வசப்படுகிறதோ அவரே சரியான குரு.
- ☆ உண்மையான நண்பனின் மனது இதயத்தைவிட உயர்ந்தது.
- ☆ நாளைய தினத்தை குறைவாக நம்பு. இன்றைய தினத்தை அனுபவி.
- ☆ பொய் சொல்பவனுக்கு மனத்தெளிவு ஏற்படுவதில்லை.
- ☆ இட்டுக்கெட்டார் எங்குமே இல்லை.
- ☆ மோசம் செய்யாத நண்பன் புத்தகம் மட்டுமே.
- ☆ உண்மையில் நீங்கள் முன்னேற நினைத்தால் வாய்ப்புக்களைத் தேடி விரைந்து செல்லுங்கள்.
- ☆ மலருக்கு மணமும் மனிதனுக்கு குணமும் அவசியம்.
- ☆ தன்கோபம் தனக்குப்பகை தன் சாந்தம் தனக்குக் காவல்.
- ☆ அனுபவத்தின் அன்பிலராயின் அரிய கொடைகளும் அர்பணமாகிவிடும்.
- ☆ உன்னை நீ அறிந்துகொள். அப்பொழுது நீ கடவுளை அறிவாய்

கு.மணிமாறன் - தரம் 10 - ஹாட்லிக்கல்லூரி.

# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- நா. நிரோபன்
கற்கும் பாடசாலை :-
கரணவாய் மகா வித்தியாலயம்
தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
கதைப்புத்தகம், கிரிக்கெட்.

முழுப்பெயர் :- சி. தனுஜன்
கற்கும் பாடசாலை :-
யாழ். மத்திய கல்லூரி
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
சித்திரம் வரைதல், கிரிக்கெட்,
கைவேலை.



முழுப்பெயர் :- வே. பார்த்தீபன்
கற்கும் பாடசாலை :-
பளை மத்தியகல்லூரி
தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
வானொலிகேட்டல்,
விளையாட்டு, கல்வி.

முழுப்பெயர் :- சி. மயூரன்
கற்கும் பாடசாலை :-
கம்பர்மலை அ.த.க. பாடசாலை
தரம் :- 3
ஆர்வமுள்ள துறைகள் :-
கிரிக்கெட்,
தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர் :- க. கௌரி
கற்கும் பாடசாலை :-
பளை மத்திய கல்லூரி
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள்:
சித்திரம் வரைதல், கதைப்புத்தகம் வாசித்தல்.

முழுப்பெயர் :- சு. சுவேந்தன்
கற்கும் பாடசாலை :-
பளை மத்திய கல்லூரி.
தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
முத்திரை சேகரித்தல்,
விளையாட்டு.

முழுப்பெயர் :- றொ. சந்திரஜித்
கற்கும் பாடசாலை :-
யாழ்ப்பாணக் கல்லூரி.
தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள் :-
வானொலிகேட்டல், பூந்தோட்டம், பந்து
விளையாடுதல்.

முழுப்பெயர் :- சி. சிவப்பிரஷாந்த்
கற்கும் பாடசாலை :-
யாழ். இந்துக் கல்லூரி
தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
கிரிக்கெட் படம் சேகரித்தல், முத்திரை
சேகரித்தல்.

முழுப்பெயர் :- சி. பவா
கற்கும் பாடசாலை :-
விக்கினேஸ்வராக் கல்லூரி
தரம் :- 11
ஆர்வமுள்ள துறைகள் :-
தொலைக்காட்சி பார்த்தல், பூந்தோட்டம்.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

**இளந்தேனீக்கள் கழகம்**
**சிறுவர் அரங்கம்**
**நமது ஈழநாடு**
**267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :........................................
கற்கும் பாடசாலை :........................................
கற்கும் தரம் :........................................
வீட்டு முகவரி :........................................
பிறந்த திகதி :........................................
ஆர்வமுள்ள துறைகள் :........................................
........................................

............... திகதி ............... ஒப்பம்

............... அதிபர்/ஆசிரியர் ஒப்பம் ............... பெற்றோர் ஒப்பம்



## உங்கள் கைவண்ணம்



ந. ருவிஸ்ரிகா
தரம் - 9
டிறிபேக் கல்லூரி.



ப. கஜேந்தினி
தரம் - 9
யாழ். கும்பிளான் விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்.

## தமிழறிவு

1) தமிழ் வளர்த்த முச்சங்கங்கள் எந்தெந்த இடங்களில் வளர்ந்தது.?
முதல் சங்கம் - கடல் கொண்ட தென்மதுரையில்.
இடைச்சங்கம் - கபாடபுரத்தில்.
கடை தமிழ்ச் சங்கம் இன்றைய மதுரையிலும் தமிழ் முழக்கம் செய்தது.
2) தமிழில் தோன்றிய இலக்கண நூல்களில் ஒன்று எது?
தொல்காப்பியம்.
3) திருக்குறளை இயற்றியவர் யார்? பொய்யாமொழிப்புலவர்.
(திருவள்ளுவர்)
4) திருக்குறள் இதுவரை எத்தனை மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது.
83 மொழிகளில்
5) சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்?
இளங்கோ அடிகள்.

ஜெ. புருசோத்தமன், தரம் - 8
நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

## பல பொருள் ஒருமொழி

| | |
|---|---|
| அகம் | - இடம், மனம், மனை. |
| அணி | - அலங்காரம், கருவி, அணிதல். |
| அம்பு | - கணை, தளிர், நீர். |
| அரங்கம் | - சபை, போர்க்களம். |
| அரம்பை | - வாழை, தெய்வப்பெண். |
| அலை | - கருமணல், கடல். |
| அவி | - சோறு, நெய். |
| ஆடல் | - குளிர்தல், ஆசை. |
| ஆடி | - ஆடிமாதம், கண்ணாடி. |
| ஆலம் | - நஞ்சு, மழை, நீர். |

சி. பிரியா
ஆண்டு 11
உடுவில் மகளிர் கல்லூரி.

## MY SELF

My Name is Sobika.
My Father's Name is Uthajasooriyan.
My Mother's Name is Arijaratham.
I have two brother's and a sister.
My Class teacher name is paramesvary.
My friends are Tharany, Santhini, and thiviya.
My School name is J/Vigneswara college.
thank you.

U.sobika - J/ Vigneswara College, Karaveddy.

## குதிப்பு

ஒரு கப்பல் உலகத்தைச் சுற்றி விட்டுச் சொந்த நாட்டுக்குத் திரும்பி வந்துகொண்டிருந் தது. காலநிலை அமைதியாக இருந்தது. எல்லோரும் மேல் தட்டில் கூடியிருந்தார்கள். ஆட்களுக்கு நடுவே, பெரிய குரங்கு ஒன்று சுற்றிவந்து எல் லோருக்கும் வேடிக்கை காட்டிக்கொண்டிருந்தது. இந்தக் குரங்கு - உடம்பை நெளித்து, துள்ளிக்குதித்து, வேடிக் கையான செய்கைகள் செய்தது, சனங்களுக்கு அழகு காட் டியது. தனது வேடிக்கைகளை மனிதர்கள் ரசிக்கிறார்கள் என்பதை அது அறிந்திருந்தது. வெளிப்படையாகத் தெரிந் தது. இதனால், அது இன்னும் எல்லைமீறிக் குறும்புகள் செய்யத் தொடங்கியது. கப்பல் கப்டனின் மகனான பன்னிரெண்டு வயதுச் சிறுவன் பக்கத்தில் அது தாவிக்குதித்து அவன் தலையிலிருந்த தொப்பியை வெடுக்கென்றுபிடுங்கி தன் தலையில் வைத்துக் கொண்டு, சரசரவென்று



பாய்மரத்தின் மேல் பிடித்து ஏறியது. எல்லோரும் வாய்விட்டுச் சிரித்தார்கள். சிறுவனோ தொப்பியைப் பறிகொடுத்துவிட்டு, சிரிப்பதா, அழுவதா என்று தெரியாமல் முழித்தான்.

குரங்கு பாய்மரத்தின் முதல் குறுக்குச் சட்டத்தின்மேல் உட்கார்ந்து, தொப்பியைக் கழற்றி, பற்களாலும், கைகளாலும் அதைக் கிழிக்க ஆரம்பித்தது. சிறுவனுக்கு அழகு காட்டுவதுபோல், தொப்பியை அவனுக்குக்காட்டி வித்தை காட்டியது. சிறுவன் மிரட்டினான், அதை துரத்தினான். அதுவோ தொப்பியை இன்னும் மூர்க்கமாகக் கிழித்தது. மாலுமிகள் உரக்கச் சிரிக்கலானார்கள். சிறுவன் முகம் சிவக்க கோட்டைக் கழற்றிப் போட்டுவிட்டு, குரங்கை விரட்டிக் கொண்டு பாய் மரத்தில் தாவி ஏறினான். ஒரே நிமிடத்தில் கயிற்றைப் பிடித்துக்கொண்டு, முதல் குறுக்குச் சட்டத்தின் மேல் ஏறிவிட்டான். ஆனால், அவன் தொப்பியைப் பிடுங்கலாமென நினைத்த அதே சமயத்தில் குரங்கு அவனைவிட, இலாவகமாகவும், வேகமாகவும் இன்னும் உயரே ஏறிவிட்டது.

"என்னிடமிருந்து எப்படியும் தப்பிவிடமாட்டாய் நீ!" என்று கத்தி சிறுவனும் மேலே ஏறினான்.

குரங்கு மறுபடியும் அவனை ஏமாற்றி தன்பக்கம் வரச் செய்துவிட்டு இன்னும் உயரே தொற்றி ஏறியது. சிறுவனுக்கு அதற்குள் ஆவேசம் வந்துவிட்டது. அவன் பின்தங்க வில்லை. இந்த விதமாகக் குரங்கும், சிறுவனும் ஒரே நிமிடத்தில் பாய்மரத்தின் உச்சிக்கு ஏறிவிட்டார்கள். குரங்கு உச்சியில் நீளப்படுத்து!, பின் கால்களால் கயிற்றைப் பிடித் துக் கொண்டு, முன் கால்களால் தொப்பியை உச்சிக் குறுக குச் சட்டத்தின் முனையில் மாட்டிவிட்டது. பின்பு அது பாய்மரத்தின் உச்சி நுனியில் ஏறிக்கொண்டு அங்கிருந்து உடம்பை நெளித்தது. பற்களைக் காட்டிற்று. கும்மாளம் போட்டது. தொப்பி தொங்கிய குறுக்குச் சட்டமுனை பாய்மரத்திலிருந்து சுமார் ஐந்து அடி தூரம் இருந்தது. ஆகவே, கம்பத்தையும் கயிற்றையும் கைப்பிடியிலிருந்து விட்டுவிடாமல் அன்றி அதை எட்டமுடியாது.

(தொடரும்...)

## காணாமற்போனோர் தொடர்பான
# ஆட்கொணர்வு மனு மீதான விசாரணைகளுக்கு படைத்தரப்பு ஒத்துழைப்பு வழங்குவதில்லை!

(யாழ்ப்பாணம்)

1996, 97 ஆம் ஆண்டு காலப் பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோர் தொடர்பாக யாழ்.மேல்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணைகளுக்கு படைத்தரப்பு ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

குறிப்பாக இந்த ஆட்கொணர்வு மனுக்களில் எதிரிகளால் குறிப்பிடப்பட்டுக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள படை அதிகாரிகளுக்கான நீதிமன்றக் கட்டளைகளை அனுப்பிவைப்பதில் சிக்கல் நிலை எழுந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

காணாமற்போன சம்பவங்கள் இடம்பெற்ற பகுதிகளில் நிலைகொண்டிருந்த படைப்பிரிவுகளில் அக்காலப்பகுதியில் அதிகாரிகளாக இருந்த சந்தேகநபர்களுக்கே நீதிமன்றால் கட்டளைகள் அனுப்பப்பட்டு வருகின்றது.

எனினும், அம்முகவரிகளில் சந்தேகநபர்களாக குறிப்பிடப்பட்ட படை அதிகாரிகள் எவருமில்லையெனக் கூறி அக்கட்டளைகள் அங்கு நிலைகொண்டுள்ள படையினரால் திருப்பி அனுப்பப்படுவதாகவும் தெரியவருகின்றது.

இதனால் சந்தேகநபர்களாகக் குறிப்பிடப்பட்ட படை அதிகாரிகளை, நீதிமன்றில் ஆஜராகும்படி கோர முடியாத நிலை தோன்றியுள்ளது.

இதனிடையே, சந்தேகநபராகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இராணுவத் தளபதி லயனல் பலகல்ல சார்பில் இராணுவத் தரப்புச் சட்டத்தரணி குருப்புவும், சட்ட மா அதிபர் சார்பில் சுகந்தி கந்தசாமியும் நீதிமன்றில் ஆஜராகி வருகின்றனர்.



அச்சுவேலி தெற்கு - ஆனைவிழுந்தான் கிராமத்தைச் சேர்ந்த வைரவன் சந்திரன் என்னும் விவசாயியின் வீட்டில் உள்ள ஆடு அதிசயமான குட்டி ஒன்றை ஈன்றுள்ளது. 24 மணி நேரம் மட்டும் உயிர்வாழ்ந்த இந்த ஆட்டுக் குட்டிக்கு நடு நெற்றியில் ஒரே கண்ணும் அதற்குள் இரு கருவிழிகளும் காணப்பட்டன. வட்டவடிவான முகத்தோற்றமும் உடையதாகக் காணப்பட்டது. ஏறத்தாழ மனிதமுகத் தோற்றமுடைய இவ் அதிசய ஆட்டுக்குட்டியை பெருந்திரளான பொதுமக்களும், பாடசாலை மாணவர்களும் சென்று பார்வையிட்டனர். (128)

## மிதிவெடி விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(உடுவில்)

சண்டிலிப்பாய், உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான மிதிவெடி விழிப்புணர்வுக் கருத்தரங்கு யுனிசெவ் அனுசரணையுடன், இன்றும் நாளையும் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (101)

## இளைஞர் யுவதிகள் இணைந்து அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுப்பு

மானிப்பாய் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள இளைஞர் யுவதிகளை இணைத்து அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இதற்கான ஏற்பாடுகளை அப்பகுதி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் தி.திருவாகினி மேற்கொண்டு வருகிறாா. அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்காக கலாசார இளைஞர் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன. இந்தக் குழு அமைப்பது தொடர்பான கூட்டம் நாளை மாலை 3 மணிக்கு மானிப்பாய் கிழக்கு பாரதி சனசமூகநிலையத்தில் நடைபெறவுள்ளது. (44)

## தட்டிவான்களில் தட்டிகளைப் பயன்படுத்த சாவகச்சேரி நீதிமன்றம் தடைவிதிப்பு!

(கொடிகாமம்)

கொடிகாமத்திலிருந்து வடமராட்சிப் பகுதிக்கும் - முகமாலைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் தட்டிவான்களில் தட்டிகள் பயன்படுத்த நேற்றுமுன்தினம் முதல் சாவகச்சேரி நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

பல வருடங்களாக பயணிகளையும், பொதிகளையும் ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டுவந்த தட்டிவான்களின் பின்பகுதியில் அதிகளவு பயணிகளை ஏற்றுவதோடு இதற்கு வசதியாக கைபிடிகளும் பொருத்தப்பட்டு இருந்தது. இதன் காரணமாக பயணிகள் தவறி வீழ்ந்து உயிருக்கு ஆபத்து ஏற்படலாமென வரணி, குடமியன், பற்றைக்காடுப் பகுதி மக்கள் சாவகச்சேரி நீதிமன்றுக்கு மக்கள் மகஜர் அனுப்பியிருந்தனர்.

கடந்த புதன்கிழமை சாவகச்சேரி பொலிஸார் தட்டிவான்களை நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

அத்துடன், தட்டிவான்களின் உரிமையாளர்கள் சாவகச்சேரி நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டுத் தட்டிவான்களில் உள்ள தட்டிகள், கைபிடிக்கம்பிகள் போன்றவற்றை அகற்றிவிட்டுச் சேவையை நடத்துமாறும், ஆறு மாதங்களின் பின்னர் மீள விண்ணப்பித்து, கழற்றிய பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் கட்டளை இடப்பட்டது.

இதேவேளை, குறித்த சேவையில் ஈடுபடும் தட்டிவான்களின் சங்கத்தின் தலைவரும், செயலாளரும் நாளைமறுதினம் சாவகச்சேரி நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி நீதிமன்றப் பதிவாளர் செ.விக்னேஸ்வரமூர்த்தி தெரிவித்தார். (29)

## வெடிபொருள் அகற்றும் செயற்பாடு; ஊடகவியலாளர்களுக்கு விளக்கம்!

(யாழ்ப்பாணம்)

கற்கோவளம் பகுதியில் வெடிபொருள் அகற்றும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் டெனிஸ் வெடிபொருள் அகற்றும் பிரிவினரின் செயற்பாடுகள் குறித்து நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

ஊடகவியலாளர்களை கற்கோவளம் பகுதிக்கு யு.என்.டி.பி நிறுவன அதிகாரிகள் அழைத்துச் சென்றனர்.

ஏற்கனவே, 8 ஆயிரம் சதுர மீற்றர் நிலப்பரப்பில் வெடிபொருள் அகற்றப்பட்டுப் பொதுமக்களின் பாவனைக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும், தற்போது மேலும் 5 ஆயிரம் சதுரமீற்றர் பரப்பளவு நிலப்பகுதி, வெடிபொருள் அகற்றப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தனர்.

இதன்போது டெனிஸ் நிறுவனத்தின் செயற்பாடுகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. டெனிஸ் வெடிபொருள் அகற்றும் பிரிவின் பொறுப்பதிகாரி சம்நல் பவுனிலா மற்றும் செயற்பாட்டலுவலர் யோசப் பிறேம்குமார் ஆகியோர் தமது செயற்பாடுகள் குறித்து ஊடகவியலாளருக்கு விளக்கமளித்தனர். (ப)

## யாழ்.செயலக பதிவாளர் அலுவலகத்தில் பெண்களை துரத்தியடித்த இடைத்தரகர்!

யாழ். செயலகத்தில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் எடுப்பதற்காகச் சென்ற பெண்களை - வாயிலில் நின்ற இடைத்தரகர் துரத்தியடித்த சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் யாழ்.செயலக பிறப்பு, இறப்பு, விவாக, காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது -

நேற்றுமுன்தினம் யாழ். செயலகத்தில் இயங்கும் பிறப்பு, இறப்பு விவாக காணிப் பதிவாளர் அலுவலகத்திற்குப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெறும் பொருட்டு சென்ற இரு பெண்களிடம் விண்ணப்பப் படிவங்கள் நிரப்பிக்கொடுக்கும் இடைத் தரகர் ஒருவர் சென்று பிறப்பு அத் தாட்சிப் பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பத்தை நிரப்பித்தருவதாக கூறினார்.

அதற்கு அந்தப் பெண்கள், தாம் அந்த விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதாகத் தெரிவித்தனர்.

இதனையடுத்து, ஆத்திரமடைந்த இடைத் தரகராகச் செயற்படும் நபர் அந்தப் பெண்களிடமிருந்த விண்ணப்பப் படிவத்தினைப் பறித்ததுடன், இழிவான வார்த்தைகளால் பேசி அந்தப் பெண்களை அங்கிருந்து விரட்டி அடித்தார்.

இதனையடுத்து, அந்தப் பெண்கள் தமக்கு நடந்தது பற்றி மேலதிக மாவட்டப் பதிவாளரிடமும் உதவி அரச அதிபரிடமும் முறைப்பாடு செய்தனர்.

இந்த விடயம் பற்றிப் பொது மக்கள் விசனம் தெரிவித்ததுடன், யாழ். செயலகத்தில் இயங்கும் பதிவாளர் காரியாலயத்தில் பணிபுரியும் சில ஊழியர்களின் ஆதரவுடனேயே இத்தகைய இடைத்தரகர்கள் செயற்படுவதாகவும் தெரிவித்தனர்.

## வட இலங்கை பத்திரிகையாளர் சங்க கலந்துரையாடல்

(வண்ணை)

வட இலங்கை பத்திரிகையாளர் சங்க அங்கத்தவர்களுக்கான கூட்டம் நாளை காலை 10 மணிக்கு சங்கக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் குறித்துச் சில முடிவுகள் மேற்கொள்ளவிருப்பதால், அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தரும்படி சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (111)

## கந்தர்மடத்தில் தேர்தல் அலுவலகம

(வண்ணை)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். - நல்லூர்த் தொகுதிக்கான தேர்தல் அலுவலகம் அரசடி வீதி, கந்தர்மடம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு தினமும் கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன. அடுத்துவரும் தினங்களில் இத்தொகுதிகளில் வேட்பாளர்கள் வீடு வீடாகச் சென்று பிரசாரத்தில் ஈடுபடவுள்ளனர். (111)

## நூல் அறிமுக அரங்கு

சி.கா.செந்திவேல் எழுதிய, 'வடபுலத்து பொதுவுடமை இயக்கமும் தோழர் கார்த்திகேயனும்' என்னும் புத்தக அறிமுக அரங்கு இன்று மாலை 6 மணிக்கு அமரர் ஆறுமுகம் கந்தசாமி ஞாபகார்த்தக் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - அறிமுக உரையை சட்டத்தரணி சோ.தேவராஜாவும், சிறப்புரையை நூலாசிரியர் சி.கா.செந்திவேலும் நிகழ்த்தவுள்ளனர்.

## எழுதுமட்டுவாள் அரசினர் பாடசாலை சொந்த இடத்தில் இயங்க அனுமதி!

தென்மராட்சியின் அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியினுள் அமைந்துள்ள எழுதுமட்டுவாள் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையை மீள இயக்க அனுமதி வழங்க யாழ். படைத்தரப்பு இணங்கியுள்ளது.

2000 ஆம் ஆண்டின் முதற்பகுதியில் ஆனையிறவு படைத்தளத்தையண்டிய பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக இந்தப் பாடசாலைக் கட்டடங்களில் நிலைகொண்ட படையினர் அங்கு முகாமிட்டிருந்தனர். இந்தநிலையில் மேற்படி பாடசாலை மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக் கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கி வருகிறது.

பாடசாலையைச் சொந்தக் கட்டடத்தில் இயக்க ஏதுவாகப் படையினரது பாவனையிலுள்ள கட்டடங்களை விடுவிக்கப் படைத்தரப்பு முன்வந்துள்ளது.

நேற்றுமுன்தினம் இராணுவப் பாதுகாப்புடன் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஒரு தொகுதி பெற்றோர்கள் பாடசாலைப் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டுப் பார்வையிட அனுமதிக்கப்பட்டனர். அவ்வேளையிலேயே படை அதிகாரிகள் விரைவில் பாடசாலைக் கட்டடத்தை மீளக்கையளிப்பதற்கான உறுதிமொழியை வழங்கியுள்ளனர். (202)

## பன்னாலையில் மீளக்குடியமர படைத்தரப்பு அனுமதி மறுப்பு!

தெல்லிப்பளை - பன்னாலைப் பகுதியில் மீளக்குடியமர வந்த குடும்பம் ஒன்றை அங்கு குடியமரப் படையினர் தொடர்ந்தும் அனுமதி மறுத்து வருகின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பாக வேலுப்பிள்ளை நடராஜா என்பவர் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார். அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எனது காணியில் 3 வருடங்களுக்கு மேலாக தோட்டம் செய்து வருகின்றேன். என்னைச் சூழப் பல மக்கள் வாழ்கின்றார்கள். நான் தை மாதம் எனது வீட்டில் குடியிருப்பதற்குச் சென்றேன். தற்போது என்னை வேறு இடத்துக்குக் குடியிருக்கச் செல்லுமாறு படையினர் கேட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

நான்காவது அகவையில்



பெயர் : ஜி.அபிரா
முகவரி : உடுவில் தெற்கு, சுன்னாகம்.

எட்டாவது அகவையில்



பெயர் : கு.சாருஜன்
முகவரி : வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

## அகதி வாழ்வின் அவலங்கள் பகுதி XXXI

# தற்கொலையில் முடிவடையும் இலங்கைப் பெண்களின் வாழ்வு

**தனது கணவனுக்கு நடந்த சம்பவத்தை எல்லாம் கடிதமாக எழுதி தபால்மூலம் அனுப்பிவிட்டு, காவல்துறையினருக்கு ஒரு கடிதம் எழுதி வைத்து விட்டு -அன்று மாலை 7 மணியளவில் தான் தங்கியிருந்த தொடர்மாடிக் கட்டடத்தின் 12 ஆவது மாடி ஜன்னலிலிருந்து கீழே குதித்துத் தற்கொலை செய்துகொண்டு விட்டாள்.**

அதில் ஒரு பெண்ணை டிக்சனின் முதல் மனைவி என்று அவனது நண்பர்கள் அவளுக்கு அறிமுகம் செய்தபோது, மல்லிகா அதிர்ந்து போய்விட்டாள்.

அவள் பைத்தியம் பிடித்தவளைப்போல ஓடிச்சென்று, கணவனின் தலைமுடியைப் பிடித்து உலுக்கி தன்னை ஏமாற்றிப்போட்டாய் பாவி என்று கத்தினாள். அவன் - அவளைப் பிடித்துத் தள்ளி கன்னத்தில் அறைந்து, உடம்பெங்கும் மிதிமிதியென்று மிதித்து விட்டான்.

ஏமாற்றம் - அவமானம் - ஆத்திரம் எல்லாம் ஒருசேர, வீட்டை விட்டு வெளியேறிச் சென்று 'செயின்' நதியில் குதித்துத் தற்கொலை செய்து கொண்டுவிட்டாள்.

மறு நாள் காலை அந்தப்பாவிப் பெண்ணின் உடல் கண்டெடுக்கப்பட்டு மரண விசாரணை நடந்த போது, விசயமறிந்த டிக்சன் தலைமறைவாகி விட்டான்.

அவனது முதல் மனைவியான பிரெஞ்சுப் பெண் மனச்சாட்சி உறுத்தியதால் காவல் துறைக்குச் சென்று அன்று நடந்தவற்றை விளக்கிக் கூறினாள்.

'மனைவியை கொடுமைப் படுத்தியது - தற்கொலைக்கு தூண்டியது' ஆகிய குற்றங்களின் பேரில் டிக்சன் மீது பாரிஸ் நகர காவல் துறையினர் பிடியாணை பிறப்பித்தனர்.

மல்லிகாவின் உடல் பாரிஸிலிருந்த தூரத்து உறவினர் ஒருவரால் பொறுப்பேற்கப்பட்டு எரியூட்டப்பட்டது. இதற்கு, இங்கிருந்து அவளது தந்தை சென்று கலந்துகொள்வதற்கு, கொழும்பிலுள்ள பிரான்ஸ் தூதரகம் விசா வழங்கியிருந்தது.

இந்தச் சம்பவத்துக்கு பின்பு பாரிஸிலிருந்து கனடாவுக்குச் சென்ற டிக்சன் - அங்கும் கலகக் குழுச் செயற்பாட்டில் ஈடுபட்டதாக அறிய முடிந்தது.

இதேபோல, இன்னொரு சம்பவமும் 1995 ஆம் ஆண்டு பாரிஸில் நடந்தது. நெதர்லாந்து (ஹொலண்ட்) நாட்டில் அரசியல் தஞ்சம் கோரியிருந்த யாழ்ப்பாண நகரத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் -தனது மனைவியை பிரயாண முகவர் மூலமாக அங்கே அழைத்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

அப்போது, ஆபிரிக்க நாடொன்றினூடாக பிரான்ஸுக்கு செல்வதற்கு வழி இருந்ததால், அந்தப் பெண் அங்கே சென்றிருந்தார்.

அப்போது அங்கே பாரிஸில் அந்தப் பெண்ணுக்கு உறவினர்கள் என்று யாரும் இல்லாததால், அவளது கணவன், ஊரில் தன்னுடன் இயக்கத்தில் (மாற்றுக்குழு) இருந்த தனது நண்பன் ஒருவனது வீட்டில் தங்குமாறும், அவளையே அவன் நெதர்லாந்துக்கு அழைத்து விடுவதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறும் கூறியிருந்தான்.

பாரிஸின் புறநகர்ப் பகுதியான 'அன்னியர் (ASNIERES) நகரத்தில் தொடர்மாடிக் கட்டடம் ஒன்றின் 12 ஆவது மாடியில் குடியிருந்த அந்த நண்பன் - அப்போது பாரிஸில் செயற்பட்ட முக்கிய கலகக் குழு ஒன்றில் உறுப்பினராக இருந்தான்.

1995 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி அந்தப் பெண் பாரிஸ் சென்றபோது, அவன் அவளின் அழகில் மயங்கிவிட்டான்.

ஏற்கனவே, அவன் பிரெஞ்சுக் குடியுரிமை பெற்ற அல்ஜீரிய நாட்டு பெண் ஒருத்தியை திருமணம் செய்து, ஒரு குழந்தையும் இருந்தது.



தனது கணவனின் நண்பன் என்று அந்தப் பெண் இவளுடன் இயல்பாக பழக - இவன் தவறான நோக்கத்துடனே அவருடன் பழகினான். ஏற்கனவே அவனுக்கும் அவனது அல்ஜீரிய மனைவிக்கும் இடையில் அடிக்கடி வாய்த்தர்க்கமும், தகராறும் நடந்தது. இந்தப் பெண் சென்றதும் கணவனும், மனைவியும் சண்டை போடுவது தினசரி வழக்க மாகிவிட்டது. பிரெஞ்சு மொழியில் அவர்கள் போடும் சண்டை அவளுக்கு விளங்கவில்லை.

அவனிடம், எதற்காக அடிக்கடி சண்டை பிடிக்கிறீர்கள் என்று கேட்டபோது, 'தனது மனைவிக்கு ஒரு புதிய காதலன் இருப்பதாகவும். அவள் அவனோடு சுற்றி விட்டு, சிலவேளை இரவில் தங்கி விட்டு வருவதாகவும் கூறினான்.

தன்னுடைய 2 வயது ஆண் குழந்தையை வளர்ப்பதற்குதான் சரியான கஷ்டப்படுவதாகவும் அவன் கூறினான்.

அவன் மீது இயல்பாக அவளுக்கு பரிதாபம் ஏற்பட்டது. அந்தப் பரிதாபத்தை தன்மீதான அபிமானமாக மாற்ற அவன் முயற்சித்தான்.

அவளை அவளது கணவனிடம் அனுப்புவதற்குரிய வேலைகளை செய்யாமல் இழுத்தடிப்புச் செய்து, அவளை தன் வசமாக்குவதற்கான பல முயற்சிகளை அவன் மேற்கொண்டான்.

அவனது இந்தக் கபட நோக்கத்தை நாளடைவில் புரிந்துகொண்ட அந்தப் பெண் - தனது கணவன் தொலைபேசி எடுத்தபோது, தனக்கு பாரிஸில் இருக்கப்பயமாக இருக்கிறது என்றும், தன்னை உடனடியாக வேறு யார் மூலமாவது கூப்பிடும்படியும் கூறினாள்.

அவனது நண்பனைப் பற்றி அப்போது அவன் ஒன்றும் கூறவில்லை. அப்படிக் கூறினால் தனது கணவன் தன்னை தப்பாக எடைபோட்டு விடுவானோ என்றும், சிலவேளை இவனே தன்னைப் பற்றி தவறான முறையில் சொல்லி விடுவான் என்றும் அந்தப் பெண் பயந்தாள்.

1995 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி அந்தப் பெண் தனது வழிக்குள் வரமாட்டாள் என்பதைத் தெரிந்துகொண்ட அந்தக் கயவன்- சாப்பாட்டில் போதைப்பொருளை கலந்துகொடுத்து, அவளை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி விட்டான்.

போதை தெளிந்த தனக்கு நடந்த கொடுமையை உணர்ந்த அந்தப் பெண், தனது கணவனுக்கு நடந்த சம்பவத்தை எல்லாம் கடிதமாக எழுதி தபால்மூலம் அனுப்பி விட்டு, காவல்துறையினருக்கு ஒரு கடிதம் எழுதி வைத்து விட்டு - அன்று மாலை 7 மணியளவில் தான் தங்கியிருந்த தொடர்மாடிக் கட்டடத்தின் 12 ஆவது மாடி ஜன்னலிலிருந்து கீழே குதித்துத் தற்கொலை செய்துகொண்டு விட்டாள்.

காவல்துறை அந்த கயவனைத் தேடியபோது, அவன் தலைமறைவாகிவிட்டான்.

ஏப்ரல் 24 ஆம் திகதி அந்த அப்பாவிப் பெண்ணின் கணவன் பாரிஸில் ஈழமுரசு அலுவலகத்துக்கு வந்து, அவள் எழுதிய அந்தக் கடைசிக் கடிதத்தின் நகலைக் காண்பித்தபோது, உண்மையிலேயே மனம் கொதித்தது.

சட்டம் அந்தக் கயவனை விட்டாலும், தான அந்த நம்பிக்கைத் துரோகியை உயிரோடு விட்டுவைக்கமாட்டேன் என்று அந்த இளைஞன் சபதம் எடுத்துக்கொண்டு சென்றான்.

அவனும், அந்தக் கயவனின் அல்ஜீரிய மனைவியும் கொடுத்த தகவல்களின் அடிப்படையில் பாரிஸ் நகரப் பொலிசார் அவன் அங்கம் வகித்த கலகக் குழு உறுப்பினரகள் பலரை கைது செய்ததுடன், கைத்துப்பாக்கிகள், கத்திகள், வாள் கள், போலியான வங்கி அட்டைகள், பெருந்தொகை பணநோட்டுக்கள் என்பவற்றை கைப்பற்றியதாகவும் அறிய முடிந்தது.

அந்தக் கயவன் கனடாவுக்கு தப்பிச் சென்று விட்டதாக அவனது நண்பர்கள் பாரிஸ் காவல்துறையினருக்குத் தெரிவித்திருந்தனர்.

பாரிஸ் காவல்துறை - கனேடிய காவல்துறைக்கு அவனைக் கண்டு பிடித்து கைதுசெய்ய உதவுமாறு வேண்டுகோள் விடுத்திருந்தனர். ஆனால், இன்று வரையும் அவன் கைது செய்யப்பட்டதாக எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

(தொடரும்...)

# குன்றும் குழியுமாகக் காணப்படும் கல்வியங்காடு செங்குந்தா வீதி

(கல்வியங்காடு)

கல்வியங்காடு செங்குந்தா வீதி நீண்டகாலமாக திருத்தப்படாது உள்ளது. அங்கு திருத்துவதற்காக வருடக்கணக்கில் கற்கள் பறித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாது உள்ளது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, செங்குந்தா வீதி மிக பழுதடைந்த நிலையில் காணப்படுவதுடன் மழை காலங்களில் பயணம் செய்யமுடியாதளவுக்கு மிகவும் சேதமுற்றும் காணப்படும்.

இவ்வீதி திருத்த வேலைகளுக்கென நல்லூர் பிரதேசசபையால் கற்கள் பறிக்கப்பட்டு வருடக்கணக்கில் காத்திருந்தும் திருத்தவேலை இடம்பெறவில்லை எனவும் இது பிரதேசசபையின் அசமந்தப் போக்கை காட்டுவதாகவும் அப்பகுதி சனசமூக நிலையத் தலைவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக நல்லூர் பிரதேசசபையின் கருத்தைக் கேட்டபோது நாங்கள் தனியார் ஒப்பந்தகாரர் ஒருவருக்கு இவ்வீதி தொடர்பாக திருத்தவேலைகளை ஒப்படைதத்துள்ளோம். ஆயினும் அவ் ஒப்பந்தகாரர் என்ன காரணமோ தனது வேலைகளை ஆரம்பிக்க தாமதப்படுத்துகிறார். பலதரப்பட்ட மக்களால் இவ்வீதி தொடர்பாக அழுத தங்கள் பிரதேச சபை மீது கொடுகக்கப்பட்டுள்ளது. விரைவில் இவ்வீதி திருத்தும் நடவடிக்கை எடுக்கபபடுமென பிரதேச சபை வட்டாரங்கள் கூறுகின்றன. (205)

# உரிமைக்களம்

## யதார்த்தமான அரசியலை அமுல்படுத்த வேண்டும்

தமிழ் மக்கள் மீண்டுமொரு ஜனநாயக அரசியலுக்குள் நுழையும் காலத்தில் நிற்கிறார்கள். அதிலும் நாடாளுமன்ற அரசியலுக்குள் ஆதிக்கத்தை நிலைநாட்ட விரும்பும் சூழலில், கவனிக்கவேண்டிய பல விடயங்களை உரிமைக்களம் உங்கள் முன் நிறுத்தி வருகின்றது. இன்று ஒரு நாடாளுமன்றத் தமிழ் வேட்பாளர் எப்படிப்பட்டவராக இருக்கவேண்டும் என்பதைப் பற்றி அவதானிப்போம்.

இலங்கையின் நிறைவேற்றதிகாரம் ஆண்டு ஒன்றுக்கு ஒரு தேர்தலை நடாத்தினாலும் அல்லது ஐந்துவருடத்திற்கு ஒரு தேர்தல் நடாத்தினாலும், அநேகமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரே ஆட்களாகவே உள்ளனர். திரும்பத்திரும்ப ஒருவரை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவதும் , அவர் ஒரே கோரிக்கையை முன்வைப்பதும் வழக்கமாகிவிட்டது. அது பற்றித் தமிழ் மக்கள் அலட்டுவதாக இல்லை. எமக்கு வாக்குரிமை இருக்கிறது. அதனைப் பயன்படுத்தி விட்டால் சரியென நினைக்கிறவர்களாகவே தமிழர்கள் உள்ளனர். இது மாற்றியமைக்கப்பட வேண்டும். இங்குதான் வேட்பாளர்களின் முக்கியத்துவம் அவசியமாகிறது. வேட்பாளர் ஒவ்வொருவரையும் தெரிந்துகொள்வதுபோல், அவரை தெரிவுசெய்யும்போது சரியான கொள்கையொன்றிற்காக வாக்களித்தேன் என்ற இயல்பும், பலமும் ஒவ்வொரு வாக்காளரிடமும் ஏற்படவேண்டும்.

அடிப்படையாக ஒட்டுமொத்த தமிழினத்திற்கும் உள்ள அடிப்டைத்தேவை எதுவென்பதை எந்த வேட்பாளன் உண்மையாக முன்னிறுத்துகிறான். அவனது கட்சி அதற்காக எப்படி கடந்த காலத்தில் உழைத்தது என்பதை கவனித்தல் அவசியம். தமிழனுக்கு தற்போது எழுந்துள்ள பிரச்சினைகளை ஒரு வேட்பாளன் அவன் சார்ந்த அரசியல் கட்சி எப்படிக் கையாள விரும்புகின்றது என்பன முக்கியமானவை.

தமிழர்களின் வேட்பாளர்கள் பொதுவான அரசியல் நீரோட்டத்தில் இணைத்திருக்கின்ற தன்மை சுயநலத்தை விட்டு அரசியலிலாவது நாடு, தமிழ் மக்கள் என்ற பொதுப்பண்பு வளர்ந்திருக்கின்றது என்பதை உணர்ந்து கொள்வது அறிவுபூர்வமானதும், சிந்தனை ரீதியாகவும் போராடும் இயல்புடைய வேட்பாளனாக விளங்குவதை புரிந்து கொள்வது, ஏமாற்று, போலி, ஊழல் சுயநலத்திற்காக தன்னை இழக்கும் தன்மை, கொள்கையேதுமின்றி நலனுக்காக குத்துக்கரணமடிப்பது என்பதை கொண்டிருக்காதவனாக, வேறுபாடுகளைக் களைந்து ஒற்றுமையாக உழைப்பவனென இனங்காணுபவனை தெரிவு செய்வதே தமிழனின் கௌரவத்திற்கும், திறமைக்கும், கல்வியில் வளர்ந்தவன் என்பதற்கும் அடையாளம்.

அமெரிக்காவின் ஜனாதிபதி தேர்தலில் ஒரு வேட்பாளர் எப்படி புடம் போட்டு வடிவமைக்கப்படுகிறார் என்பதை சுருக்கமாக நோக்குவோம்.

ஜனாதிபதி வேட்பாளர்கள் பலரை ஒரு கட்சி நிறுத்தும் அவர்கள் ஒவ்வொருவரும் எல்லா மாநிலத்திலும் போட்டிபோடுவார்கள். முதலில் தமது ஆளுமைகளை வெளிப்படுத்துவார்கள். ஒழுக்கம் கடமை உணர்வு கட்டுப்பாடு தமது தேசத்தின் கலாசார விழுமியங்களின் பேணுகை பற்றியநிலை என வேட்பாளர்கள் பிறந்ததிலிருந்து தற்போதைய நிலைவரை மதிப்பீடு செய்யப்படும். அப்படியான மதிப்பீட்டை அக்கட்சியின் வேறுவேட்பாளர்களும், எதிர்க்கட்சி வேட்பாளர்களும் ஊடகங்களும் மேற்கொள்ளும். இவை எல்லாவற்றிற்கும் தப்பிப் பிழைத்து வரும் வேட்பாளர்கள் - எதிர்க்கட்சி வேட்பாளருடன் போட்டி போட்டே இறுதியில் தெரிவுசெய்யப்படுவார். தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி வில்லியம் புஷ் வியட்னாம் போரில் சொல்லாமல் கொள்ளாமல், இராணுவத்தை விட்டு வெளியேறியவர் என ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோன் ஹெரி பகிரங்கமாக குற்றஞ்சாட்டியுள்ளார். இதனால் புஷ்ஷின் செல்வாக்கு 40 சதவீதத்திற்கு வீழ்ச்சி கண்டுவிட்டது.

இதேபோன்று எத்தனையோ அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்காகத் தோல்வியடைந்தவர்கள். இத்தகைய அரசியல் கலாசாரம் ஏன் தமிழ் மக்களிடம் ஏற்படக்கூடாது. இம்முறை அப்படியே இல்லாவிட்டாலும் சில அம்சங்களிலாவது நாம் முதன்மைப்படுத்தி எமது வேட்பாளர்களை மதிப்பீடு செய்யவேண்டும். அதனை ஊடகங்களும், கட்சிகளும் முன்னெடுக்க வேண்டும். அமெரிக்க முறைமை அப்படியே பின்பற்றாது ஸ்கன்டினேவிய நாடுகளில் வேட்பாளர் ஒவ்வொருவரதும் ஆளுமைகள், ஒழுக்கங்கள் போலித்தனங்கள் வாக்காளர்களால் மதிப்பிடப்பட்டு இறுதித் தெரிவு சாத்தியமாகிறது.

இவ்வாறான மதிப்பீடுகள் தமிழர் மத்தியில் ஏற்படவேண்டும். சிங்க நாட்டில் சிறப்பாய் சீவிக்கிறவர்கள், அன்னிய அயல்நாட்டில் கூடிக்குலாவி அடிவருடித்தனம் புரிபவர்கள் மத்தியிலும், மாநிலத்திலும் போர்வெறிபிடித்தவர்களுடன் கூட்டாட்சி புரிபவர்கள் யார் யார் என்பதை தெரிந்து கொள்ள முடியும். தேர்தல் நாட்களில் வருபவர்கள் ஆசனத்துடன் போவார்கள். ஒவ்வொரு தேர்தலிலும் இதுதான் துயரம். தமிழினத்தை காட்டிக்காட்டி வயிறுவளர்ப்பவர்கள் எவர் என்பதை புரிந்து கொள்ளமுடியும்.

தமிழ் அரசியல் தலைமையில் மாற்றம் ஏற்படுத்தவேண்டும். ஏமாற்றத்தனத்தின் மீதான நம்பிக்கையை அகற்றுவதுடன், வெளிப்படையான அரசியல் விமர்சனங்களை முதன்மைப்படுத்தி யதார்த்தமான அரசியலை அமுல்படுத்த வேண்டும் எனக் குறிப்பிட்டு விடை பெறுகிறேன்.

க.ஐங்கரன்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*கண்டார் உயிர்உண்ணும் தோற்றத்தால் பெண்தகைப்*
*பேதைக்கு அமர்த்தன கண்*

திருக்குறள்

# நமது நோக்கு

## சந்திரிகாவின் பொய்களும், பொறிகளும்...

'பொய்களுக்கும் அரசியல்வாதிகளுக்குமிடையேயான தொடர்பு உடலுக்கும் உயிருக்குமிடையிலான உறவைப் போன்றது. ஒன்றில்லாமல் ஒன்று உயிர்த்துடிப்புடன் இயங்க முடியாது' - இவ்வாறு கூறியுள்ளவர் மேல்நாட்டு அறிஞர்களுள் ஒருவரான கிங்கிப்ளிங் என்பவரே.

இவர் இதனை பொதுவான ஒரு அரசியல் கருத்தாக முன்வைத்திருந்தாலும் கூட, தென்பகுதி பேரினவாத அரசியல் தலைமைகளின் தேர்தல் கால பிரசாரப் பேச்சுக்களை அவதானிக்கும் போது அது மிகப் பொருத்தமான கருத்து வெளிப்பாடு தான் என்பதை உணரமுடிகிறது.

சுல்தான் அல்லது பக்கீர் என ஒரு உவமான வார்த்தை தமிழ் மக்களின் பேச்சுவழக்கில் உண்டு. ஒன்று அந்தத் தொங்கல் அல்லது இந்தத் தொங்கல் என்ற கருத்தினையே அது கொண்டதாகும்.

சில நாட்களின் முன்னர் இலங்கை ஜனாதிபதி, சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க விரும்புவதாக விடுதலைப் புலிகள் தனக்குச் செய்தியனுப்பியுள்ளதாக ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற சந்திப்பில் தெரிவித்து விடுதலைப்புலிகள் பலவீனமடைந்துபோய் தன்னோடு சமாதானம் பேசமுற்படுகிறார்கள் என்ற தொனிப்பட கருத்தொன்றை வெளியிட்டார்.

ஆனால், விடுதலைப்புலிகள் தரப்பு உடனடியாக இதனை நிராகரித்து தாங்கள் அவ்வாறானசெய்தி எதனையும் தெரிவிக்கவில்லை என இணையத்தளம் ஒன்றில் செய்தி ஒன்றினை வெளியிட்டு உண்மையை விளக்கியிருந்தனர்.

இதேவேளை - இதனையடுத்து நேற்று முன்தினம் ஜனாதிபதி சந்திரிகா லண்டன் பி.பி.சி செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய செவ்வி ஒன்றில் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் விடுதலைப்புலிகளின் தலைமைக்குமிடையே பல்வேறு தொடர்புகள் இருந்துவருவதாகவும் ஆனால் இதனைப்பற்றி இப்போதைக்கு எதனையும் கூறமுடியாது என்றும் மற்றொரு புதுக் கதையை புதிர்க்கதையாக வெளியிட்டிருக்கிறார்.

அத்துடன், முன்னர் கூறிய தனது கருத்து நிலையை மாற்றி வேறு வடிவில் ஒரு செய்தியையும் வெளியிட்டிருக்கிறார். அதாவது, தேர்தலின் பின்னர் புதிதாக அமையப் போகும் அரசு (அது ரணில் தலைமையிலான அரசாக இருந்தாலம் சரி சந்திரிகா தலைமையிலான அரசாக இருந்தாலும் சரி...) விடுதலைப்புலிகளை அதாவது தேசியத்தலைவர் பிரபாகரனை அனுகியே ஆகவேண்டும். அப்படியான அவசியம் இருக்கிறது என அவர் அதே பேட்டியில் வெளிப்படையாகக் கூறியிருக்கிறார்.

இந்த முன்னுரை எந்தத் திட்டத்தின் அடிப்படையில் கூறப்பட்டது என சிந்திக்க வேண்டியதும் உண்டு. உலகை ஏமாற்றவா? அல்லது தமிழ் மக்களை ஏமாற்றவா? அல்லது சமாதான விரும்பிகளை திருப்திப்படுத்தவா? அல்லது இதைவிடவும் வேறு அரசியல் சக்திகளையும் உள்ளடக்கியதா என்பதை ஆழமாகயோசிக்க வேண்டியகட்டமிதுவாகும்.

நான்கு நாட்களின் முன்னர் புலிகள் தன்னோடு தொடர்பு கொண்டிருக்கிறார்கள் என அறிக்கை விட்டவர் இரு நாட்களின் பின்னர் தாமும் தேர்தேலின் பின் பிரபாவை அனுகியே ஆகவேண்டும் என்கிறார் என்றால்

- எது பொய்? எது மெய்?

இதுஒரு புறமிருக்க கடந்தவார இறுதியில் வெளியான தென்பகுதி ஆங்கில வார இதழ் ஒன்றில், விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து தனியாகப்பிரிந்து இயங்க, மட்டக்களப்பின் கருணா முடிவு செய்ய முன்னர் சந்திரிகாவுடன் தொடர்பு கொண்டு தனது நிலைப்பாட்டை அவருக்கு முன்னறிவிப்பு செய்திருந்தார் என முக்கியமான செய்தி ஒன்றையும் வெளியிட்டிருந்தது.

அதனையடுத்து, ஜனாதிபதித் தரப்பு அதனை அரை குறையாக மறுத்திருந்த போதும் அதனை முற்றாக உடன் நிராகரிக்கவில்லை.

ஆனால், நேற்று முன்தினம் பி.பி.சி பேட்டியில் கருணா என்னுடன் தொடர்பை ஏற்படுத்த பலமுறை முயன்றார் என வெளிப்பைடயாக ஒப்புக் கொண்டுள்ளதுடன் கருணாவை எப்படி அனுகவேண்டும் என்பதை தேர்தலில் வென்ற பின் அமையும் அரசு (தனது தலைமையிலான அரசு என்றால்...) கண்டறிந்து அதற்கான வழிமுறைகளை ஆராயவேண்டும் என்று கூறியுள்ளார்.

ஆனால், சந்திரிகா இப்போதே அதற்கான அனுகுமுறைகளை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தத் தொடங்கிவிட்டார் என்பதை நடக்கும் நிகழ்வுகள் உறுதி செய்து வருகின்றன.

கடந்த சில தினங்களாக கிழக்கில் இராணுவக்கட்டுப்பாடு இல்லாத பகுதியில்உலங்குவானூர்திகள் சென்று இறங்கிவருவதாகவும் இதன் காரணமாக அங்குள்ள மக்கள் பீதி கொண்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அப்படியானால், இந்த உலங்குவானூர்திகளை அனுப்பி வருவது யார்?

அது இலங்கை இராணுவததிற்குச் சொந்தமானவையாகத் தான் இருக்க வேண்டும். அப்படியானால் அதற்கான அனுமதியை கொடுத்தவர் யார்? பாதுகாப்பு அமைச்சுத்தான் என்பதில் சந்தேகமேயில்லை.

தற்போதைய முப்படைத்தளபதியும், பாதுகாப்பு அமைச்சரும் சந்திரிகாவே தான்... எனவே, அவர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும், வரதராஜப்பெருமாளுக்கும், ஆனந்த சங்கரியாருக்கும் அரவணைத்து உதவுவது போன்று கருணாவுக்கும் உதவத் தொடங்கிவிட்டார் என்றே மக்கள் பேசிக் கொள்வது உண்மையாகத் தான் இருக்கும்.

எனவே , கருணாவை அனுகும் வழிமுறைகளை ஏற்கனவே, நடைமுறைப்படுத்திக் கொண்டு தேர்தலில் பின் பிரபாவையும் அனுகியே தீரவேண்டும் என்றால் எப்படி? சந்திரிகாவின் பொறிக்குள் சாதாரணர்கள் சிக்கலாம் அசாதராண ஆளுமையுள்ள தமிழினத்தின் தேசியத்தலைமை சிக்காது என்பதை வரலாறு பலதடவை நிரூபித்தேயுள்ளது.

# நாடும் நடப்பும்

செய்தி : ஜே.வி.பி யின் துணை இல்லாமல் சிறிலங்கா சுதந்திரக்கட்சியை வலுப்படுத்திக் காப்பாற்ற முடியாது என்கிறார் அநுர பண்டாரநாயக்கா....



# மூவின மக்களும் ஏற்கக்கூடிய வகையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்

## மஹிந்த ராஜபக்ஷ கூறுகிறார்

மூவினங்களும் ஏற்கும்வகையிலான இனப்பிரச்சினைக்குத் தீர்வையும், அரச நிர்வாகமொன்றையும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் ஏற்படுத்துவோம் என முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அண்மையில் மொனராகலையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்-

ஐக்கிய தேசிய முன்னணி நாட்டு மக்களை ஏமாற்றி வந்தயுகம் முடிந்துவிட்டது. 2001 ஆம் ஆண்டு தேர்தல் போன்றே, இந்த முறையும் ஐக்கிய தேசிய முன்னணி வாக்குறுதிகளை அள்ளிவீசிக்கொண்டிருக்கிறது. கடந்த இரண்டு வருடகாலமாக நாட்டில் வறுமை, ஊழல், குற்றச்செயல்கள், வன்முறைகள் அதிகமாகவே தலைதூக்கியுள்ளன.

மக்களிடையே பணப்புழக்கம் குறைக்கப்பட்டுள்ளது. எமது முன்னணி ஆட்சி அமைத்ததும் நிச்சயமாக எமது செயற்பாடுகளைக் காண்பீர்கள். இன்று விவசாயத்துறை நீண்ட தூரம் பின் நோக்கியுள்ளது. இவற்றை மீளக்கட்டியெழுப்பி எமது கூட்டு முன்னணி தேர்தல் விஞ்ஞாபனத்தில் விவசாயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது.

வேற்று நாடுகள் எமது கடல் வளத்தை சூறையாடுகின்றது. இவற்றை தடுக்க எந்த விதமுயற்சிகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. எமது கூட்டு முன்னணி எந்தவிதத்திலும் போரை விரும்பவில்லை. சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இனப்பிரச்சினைக் குத் தீர்வு காண்போம் என மஹிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

# ஓய்வூதியர்களுக்கான வவுச்சர்கள் செயலகத்தில் வைத்தே வழங்கப்படும்

## தென்மராட்சி செயலகம் தெரிவிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசசெயலகம் மூலம் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்களது ஏப்ரல் மாத ஓய்வூதியம் பிரதேச செயலகத்தில் வைத்தே வழங்கப்படவுள்ளன.

ஓய்வூதியக் கொடுப்பனவுகளில் மோசடிகள் இடம்பெறுவதைத் தடுக்கும் முகமாக மார்ச் மாத ஓய்வூதியப் பற்றுச் சீட்டினை பிரதேச செயலகங்களில் வைத்து வழங்குமாறு அரச அதிபரால் அறிவிக்கப்பட்டது தெரிந்ததே. மார்ச் மாத பற்றுச்சீட்டுகள் ஏற்கனவே, அனுப்பப்பட்டுவிட்டதால் அதனை நடைமுறைப்படுத்த முடியாமல் போனதால் ஏப்ரல் மாதம் இந்த நடைமுறை அமுல்படுத்தப்படவுள்ளதாக பிரதேச செயலக ஓய்வூதியப் பகுதியினர் தெரிவித்தனர்.

ஏப்ரல் மாதப் பற்றுச்சீட்டுக்கள் ஏப்ரல் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதால் அனைத்து ஓய்வூதியர்களையும் தமது ஓய்வூதிய அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டையுடன் சமுகம் தந்து பெற்றுக்கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது.

நேரடியாக வரமுடியாதவர்கள் வயோதிபர், நோயாளர்கள் தத்தமது கிராம அலுவலரூடாக காரணத்தை அறியத் தந்தால் அவரது அத்தாட்சிப்படுத்தலுடன், அவரூடாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், இது சம்மந்தமாக கடிதம் சகல ஓய்வூதியர்களுக்கும் அடுத்தவாரம் தபாலில் அனுப்படவுள்ளதாகவும் பிரதேச செயலக கணக்காளர் தெரிவித்தார். (24)

# கிழக்கில் ஏற்பட்டிருக்கும் முரண்பாடு சுமுகமாகத் தீர்த்து வைக்கப்படும்

## மன்னார் ஆயர் நம்பிக்கை தெரிவிப்பு

(மன்னார்)

கிழக்கில் ஏற்பட்டுள்ள முரண்பாட்டினால், நாம் மனம் வருந்தினாலும், இந்த முரண்பாடு மிகவும் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்படும் என தமக்கு நம்பிக்கை எழுந்துள்ளதாக மன்னார் ஆயர் இராயப்பு யோசப் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

போரின் துன்பங்கள் நீங்கி கடந்த இரண்டு ஆண்டுகளும் நாம் நிம்மதியாக வாழ்ந்தோம். இன்று நாம் அனைவரும் ஒரு பொதுத்தேர்தல் வாசல்படியில் நிறுத்தப்பட்டுள்ளோம். தமிழ்மக்களைப் பொறுத்தவரையில், இந்தத் தேர்தல் சமாதான அர்ப்பணிப்பையும், எமக்குள் சுயநிர்ணய உரிமையையும், அகில உலகுக்கும், தென்னிலங்கைக்கும் பலமாக எடுத்துக் காட்டும் ஒரு அரிய சந்தர்ப்பம் ஆகும். இந்த நிலையில் நாம் மனம் குழம்பாது அமைதிகாத்து ஒருமனதுடன் செயற்படவேண்டியது முக்கியமான விடயமாகும்.

தேர்தல் விதிகளுக்கோ, ஜனநாயக வழிமுறைகளுக்கோ களங்கம் ஏற்படாத முறையில் செயற்படவேண்டியது கிறிஸ்தவர்களின் கடமை என்பதை நான் இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகின்றேன். வாக்களிப்பதற்கு உங்களுக்கு இருக்கும் பொன்னான உரிமைகளைத் தட்டிக்கழிக்கவேண்டாமென நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து தேர்தலில் போட்டியிடுவது தமிழ்மக்களாகிய எமக்கு நம்பிக்கை ஒன்றை பெற்றுத்தந்துள்ளது.

தமிழ்மக்களின் நலனையும், நாட்டின் சமாதானத்தையும் வலியுறுத்தும் தமிழ்மக்களின் விருப்பு இந்தத் தேர்தல் மூலம் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டப்படவேண்டும். எனவே, தூரநோக்குடனும், துணிவோடும் எமது விலைமதிக்கமுடியாத வாக்குகளை பயன்படுத்தவேண்டும். தமிழர்களாகிய நாம் இதுவரைகாலமும் பட்ட துன்பங்களும், போரின் கொடிய வேதனைகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்து எமது தாயகத்தில் ஒரு தாய் பிள்ளையாக வாழ எம்மை நாமே ஆண்டு, வளர்ச்சியடைய எமது பொறுப்பு வாய்ந்த வாக்களிப்பு ஒரு வரலாறு படைக்கும் என்ற நம்பிக்கையில் உங்கள் அனைவருக்கும் இறையாசிவேண்டி நிற்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (07)

வாரநோக்கு

யாழவன்

# வீணாக மக்களை வம்புக்கு இழுத்து முதலையே இழக்கப்போகும் கட்சிகள்

தேர்தல் வாரங்கள் தான் தற்போது எமது தெருவெல்லாம் சுற்றிவருகின்றன. சந்தியிலே நின்று ஒரு கூட்டம் பிரசாரம் செய்வதும், மறுபக்கத்திலே இன்னொரு கூட்டம் பிரசாரம் செய்வதும், இதற்கிடையே புடுங்குப்பாடுவது மென இன்றைய நாள்கள் நகர்ந்துகொண்டிருக்கின்றன.

**தற்போது பல்கலைக்கழக மாணவர்கள் தமிழத்தேசிய கூட்டமைப்புக்கு ஆதரவாக வீடு வீடாகச் சென்று தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். இந்த நலையில் அவர்களது பொறுமையைச் சோதிக்கும் வகையில், மாற்றுக்கட்சியினர் நடந்து கொண்டதால் அது இன்னும் மாணவர்களை உத்வேகம் கொள்ளவைக்கும். எனவே தமிழ்த்தேசிய கூட்டமைப்பினருக்கு ஆதரவாக பிரசாரம் செய்வதைவிட, குறித்த கட்சிகளுக்கு எதிராகவே அதிகம் பிரசாரத்தில் ஈடுபடுவார்கள். இது அக்கட்சியின் வாக்கு பலத்திலே பாரிய பின்னடைவை உண்டுபண்ணும்.**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தமிழினத்தின் ஒற்றுமையை உலகறியச் செய்ய வேண்டி களத்திலே குதித்துள்ள இந்த நேரத்திலே, அந்த ஒற்றுமையைக் குலைக்கும் வகையிலும், கேள்விக்குள்ளாக்கும் நிலையிலும் ஈ.பி.டி.பியினரும், ஆனந்தசங்கரி தலைமையிலான சுயேச்சைக் குழுவினரும் போட்டியிலே குதித்துள்ளமை தான் - யாழ். குடாநாட்டிலே நடைபெறும் சிறுசிறு தேர்தல் அசம்பாவிதங்களுக்குக் காரணமாகும்.

இதில் அநேகமான சம்பவங்களுடன் ஈ.பி.டி.பியினரே தொடர்புபட்டுள்ளனர். சம்பவங்கள் நடைபெற்ற விதத்தை ஆராய்ந்து பார்க்கும்போது, ஈ.பி.டி.பியினர்தான் வேண்டுமென்றே சில அசாதாரணச் சூழ்நிலைகளை தோற்றுவித்து, அந்தச் சூழ்நிலைச் சிக்கல்களூடாக அனுதாப ஆதரவைத் தேர்தலிலே பெற்றுக்கொள்ள முயல்கின்றனர் போலப்படுகிறது.

கடந்த ஓரிரு தினங்களுக்கு முன்னர் கந்தர்மடப் பகுதியிலே ஒரு சம்பவம் இடம்பெற்றுள்ளது. தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர் ஒருவரின் வீட்டுக்கு முன்னால் நின்றுகொண்டு, ஈ.பி.டி.பியினர் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நடவடிக்கையானது ஒரு அர்த்தமற்ற விடயமாகும்.

இன்னொரு கட்சியிலே போட்டியிடும் வேட்பாளர் வீட்டுக்கு முன்னே போய்நின்று, அவரையும், அவர் சார்ந்த குழுவையும் தரக்குறைவாகப் பேசுவதும், வீணாக வம்புக்கு இழுப்பதும் நாகரிகமான அரசியலாகப் படவில்லை. சும்மாய் கிடந்த சங்கை ஊதிக்கெடுத்துவிட்டுப் பின்னர் புலிகள்தான் தம்மைத் தாக்கியதாகக் குற்றம் சுமத்துவதும், ஜனநாயகம் இங்கே செத்துவிட்டதாக கூச்சல் போடுவதும் ஜனநாயக வழிக்குத் திரும்பிவிட்டதாகக் கூறும் கட்சியினருக்கு அவ்வளவு ஆரோக்கியமான விடயமல்ல.

ஒருவேளை குடாநாட்டிலேயுள்ள ஒட்டுமொத்த தமிழ் மக்களும் பத்திரிகை வாசிக்கத் தெரியாத பாமரர்களாகவும், அரசியல் தெளிவற்றவர்களாகவும், தேர்தலை வெறும் சலுகைகளுக்கான களம் என்று நினைப்பவர்களாகவும் இருந்தால், இவர்களது இந்தப் பிரசார யுக்தி எடுபடும். ஆனால், சரியான அரசியல் தெளிவுள்ள எல்லாவற்றிற்கும் மேலாக அரசியல் தீர்க்கதரிசனமான பார்வையுள்ள மக்கள் மத்தியிலே இந்தப் போலித்தனமான பிரசாரங்கள் அதிகம் எடுபடாது.

இதனை ஈ.பி.டி.பியினர் மட்டுமல்ல, ஆனந்தசங்கரி தலைமையிலான குழுவினரும் உணர்ந்துகொள்ளவேண்டும். இந்த உணர்வு அவர்களுக்கு இருப்பின் அவர்கள் முதுகெலும முள்ளவர்களாக மதிக்கப்படுவார்கள். வெறும் வார்த்தை ஜாலங்களை மட்டும் வைத்துக்கொண்டு, துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும், பத்திரிகை விளம்பரங்கள் மூலமாகவும் பல இலட்ச ரூபாய் பணத்தைச் செலவழித்துப் பிரசாரம் செய்யும் இவர்கள் - தமக்கு உண்மையான மக்கள் ஆதரவு இருக்கின்றது என்றால், பொதுக் கூட்டங்களை நடாத்தி, மக்கள் கூட்டத்தை வரவழைத்து அதன்மூலமாக நிரூபிக்கவேண்டும்.

அதைவிடுத்து, வீணாகத் தேவையற்ற முறையிலான வம்புத் தனமான பிர சார நடடிவக்கைகளில் ஈடுபட்டு, பின்னர் மூக்குடைபட்டு விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பது போல பேசுவதும், மக்கள் கொதிதெழுந்து அநீ திக்கு எதிராகச் செய்த நடவடிக்கைக ளைப் புலிகளின் தூண்டுதலினால் செய்தார்கள் எனவும், மக்களோடு புலிகளும் நின்றார்கள் எனவும் பிரசாரம் செய்வது கபடத்தனமான அரசியலின்படி முறையாகும். இத்தகையவர்களுக்குக் காலம் பதில் சொல்லும்.

கந்தர்மடம் பகுதியிலே நடைபெற்ற சம்பவத்தின்பின் பல்கலைக்கழக மாணவர்களுக்கும், ஈ.பி.டி.பியினருக்கும் இடையே இடம்பெற்ற வாக்குவாதமானது முற்றி, பின்னர் கைகலப்பு ஏற்படும் நிலைக்கு சென்றுள்ளது. மாணவன் ஒருவனை - ஈ.பி.டி.பியினருக்கு பாதுகாப்பாக வந்த பொலிஸாரும், இராணுவத்தினரும் தாக்கமுறப்பட்டதாகவும், அந்த மாணவன்மீது வாகனத்தை ஏற்ற முட்பட்டதாகவும் மாணவர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் கிளர்ந்தெழுந்த மாணவர்கள்-ஈ.பி.டி.பியினரை அவர்களது குகையான ஸ்ரீதர் தியேட்டர் வரை துரத்திச் சென்றதாகவும், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பல்கலைக்கழக மாணவர்கள்



தமிழத்தேசிய கூட்டமைப்புக்கு ஆதரவாக வீடு வீடாகச் சென்று தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். இந்த நிலையில் அவர்களது பொறுமையைச் சோதிக்கும் வகையில், மாற்றுக்கட்சியினர் நடந்துகொண்டதால் அது இன்னும் மாணவர்களை உத்வேகம் கொள்ளவைக்கும்.

எனவே தமிழ்த்தேசிய கூட்டமைப்பினருக்கு ஆதரவாக பிரசாரம் செய்வதைவிட, குறித்த கட்சிகளுக்கு எதிராகவே அதிகம் பிரசாரத்தில் ஈடுபடுவார்கள். இது அக்கட்சியின் வாக்கு பலத்திலே பாரிய பின்னடைவை உண்டுபண்ணும்.

ஏனெனில், யாழ். குடாநாடு திறந்த வெளி சிறைச்சாலையாக இருந்தபோது, தமிழ்மக்களின் உரிமைகளுக்காக குரல்கொடுத்து பொங்குதமிழ் நிகழ்வை எத்தனையோ உயிராபத்துக்களுக்கு மத்தியிலே நடாத்திமுடித்து, தமிழர்களின் பிரச்சினை சர்வதேசம் வரை சென்றதிலே பல்கலைக்கழக மாணவர்களின் பங்கு அளப்பரியது. அதன்மூலமாக சமூக மட்டத்திலே பல்கலைக்கழக மாணவர்கள் மீதான அபிமானம் வலுப்பெற்றது.

இந்தநிலை மேலும் மேலும் வளர்ந்துகொண்டு வருவதால், பல்கலைக்கழக மாணவர்களின் சொல்லுக்கு சமுதாயத்திலே அதிக மதிப்பு இருக்கிறது. இதனை புரிந்துகொள்ளாது அரசியல் பால்குடிகள்போல டக்ளஸ் தேவானந்தாவும், ஆனந்த சங்கரியும் நடந்துகொள்வது சிரிக்கத்தக்க விடயமாகவுள்ளது.

ஆனந்தசங்கரியார் - பல்கலைக்கழக மாணவர்களை அவ்வப்போது அறிக்கைகள் மூலமாக பகைத்துக்கொண்டு வருகிறார். முன்னர் அவரது அறிக்கைகளுக்கு பதிலளித்த பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், தற்போது அவரது கருத்துக்களை அவ்வளவாகப் காதில் போட்டுக்கொள்வதில்லைபோல தெரிகிறது.

பல்கலைக்கழக மாணவர்கள் - பின்னணி சக்திகள் ஒன்றின் காரணமாகவே இவ்வாறு நடந்துவருகிறார்கள். அவர்கள் சுயமாக சிந்திக்கவில்லை. அவர்களது வாய்கள் பூட்டப்பட்டும், கைகள் கட்டப்பட்டும் உள்ளன என்பதே, ஆனந்தசங்கரியார் பல்கலைக்கழக மாணவர்கள் மீது சுமத்தும் தற்போதய குற்றச்சாட்டு.

இந்த விடயம் மாணவர்களைவிட, சங்கரியாருக்கே அதிகம் பொருந்தும். ஏனெனில், தமிழினத்தின் ஒற்றுமைகளை சிதைப்பதற்காக, அவரே பல பின்னணிச் சக்திகளின் தூண்டுதலின் பேரிலே செயற்பட்டு வருகிறார். இது வெறும் சந்தேகமல்ல, அப்பட்டமான உண்மையும்கூட.

அயல் வீட்டுக்காரன் இந்தியாவினதும் ஜனாதிபதி சந்திரிகாவினதும் விசுவாசியாக சங்கரி மாறிவிட்டார். அவர்கள் எதைச் சொல்கிறார்களோ அதையே இவர் மறு ஒலிபரப்புச் செய்கிறார். அதற்கான கூலிகளையும் பெற்றுவிடுகிறார். இல்லாது போனால், இவ்வளவு பத்திரிகை விளம்பரங்களை மேற்கொள்வதற்கு எங்கிருந்து பணம் கிடைத்தது. எமது மக்களுள் சிலர் - தற்போது எதிர்பார்த்தது போல வீதிபோடவும், மின்சாரம் வழங்கவும் நிதியில்லை எனக் கையைவிரித்த சங்கரியார்- இப்போது கையை விசுக்குகிறார். லட்சம் லட்சமாகப் பணத்தைக் கொட்டி, விளம்பரம் செய்கிறார். அந்த விளம்பரங்களில் வருகின்ற வசனங்கள் அநேகமானவை சங்கரியாரைப் பொறுத்த விதத்திலே மிகவும் அரிதான விடயங்கள்.

வார்த்தை ஜாலங்களால் மக்கள் வாக்குகளை கவர நினைக்கிறார் சங்கரியார். இவரது அவ்வார்த்தை சற்றுக் காலத்தின் பின் எமது மக்கள் இந்த மண்ணிலே நிறுத்தி வைப்பார்கள். அப்போது சங்கரியாருக்கு சுடலை ஞானம் பிறக்கும்.

சங்கரியார் தன்னோடு போட்டியிடும் வேட்பாளர்கள் பலருக்கும் பணத்தை அள்ளிக் கொடுத்துள்ளதாகச் சில தகவல்கள் தெரிவிக்கின்றன. இப்பணம் - அனைத்து நாட்டையும், இனத்தையும் காட்டிக்கொடுத்து, அதற்கு கூலியாக பெற்றுக்கொண்ட கள்ளப் பணமே அது தண்ணிபோல கரைகிறது.

இவ்வாறு குதர்க்க வாதங்களினால் வெற்றியைக் கோட்டை விடத்துணியும் சங்கரி, டக்ளஸ் மத்தியிலே ஒரு புரிந்துணர்வும் ஏற்பட்டுள்ளது. அதாவது ஜனாதிபதியினுடைய சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியும் இணைந்து உருவாகியுள்ள மக்கள் ஐக்கிய முன்னணிக்கு இருவருமே ஆதரவு வழங்கி வருகிறார்கள்.

டக்ளஸ் தேவானந்தா இந்தக் கட்சிகளிடையேயான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்போது, நேரிலே சென்று வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளார். ஆனந்தசங்கரியாரும் மறைமுகமாக இந்தக் கூட்டணியை ஆதரித்துவருகிறார்.

ஆனால், இந்தக் கூட்டணியோ கூத்தடிக்கிறது. யுத்தத்தின் மூலமாகவே சமாதானத்தைக் கொண்டுவர முடியுமென அவர்கள் எண்ணுகிறார்கள். இது விபரீதமான விளைவுகள் ஏற்படுவதற்கான முன்னெச்சரிக்கையாகும்.

இதனை இந்தக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் காணக்கூடியதாக உள்ளது. இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் கடந்த வாரம் வெளியிடப்பட்டிருந்தது. இதேபோன்று ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியும் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளது.

இதிலே விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாக அலகு ஒப்படைக்கப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இது வரவேற்கத்தக்க விடயமாகும். ஒருவேளை, ரணில் தலைமையிலான அரசே மீண்டும் ஆட்சிக்கு வருமாயின், நாடு இரண்டுபடப்போகிறது என்று கூச்சலிடும் கட்சிகளும், நபர்களும் வாயடைத்துப் போய்விடுவார்கள்.

விடுதலைப் புலிகளுடன் தேசிய சமாதானத்தைக் கொண்டுவர கடந்த தேர்தலிலே வாக்களித்த சிங்கள மக்கள் - பிரதமர் ரணிலுக்கு ஆதரவை வழங்கியிருந்தனர். இந்த ஆதரவு - இம்முறையும் மேலதிகமாகக் கிடைக்குமெனில், இடைக்கால நிர்வாக அலகு உருவாகுவது இலகுவான விடயமாக இருக்கும். இடைக்கால நிர்வாக அலகைப் புலிகளிடம் வழங்குவேன் எனக்கூறி, தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்ட பிரதமர் ரணிலின் துணிவைப் பாராட்டத்தான் வேண்டும்.

இது ஒருபுறமிருக்க, வன்னிப் பகுதி வாக்காளர்களின் வாக்களிக்கும் உரிமை தொடர்பாகவும் பல உயர்மட்ட மாநாடுகள், கலந்துரையாடல்கள் நடைபெற்றவண்ணமுள்ளன. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மக்களை இராணுவ எல்லைக்குள் வரவழைத்து, வாக்களிக்க வசதி செய்துகொடுக்கப்படலாம் என சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஆனால், இந்த ஒழுங்கமைப்பு வன்னி மக்கள் அனைவரினதும் ஜனநாயகப் பலத்தைக் காட்டி நிற்க வழிசமைக்குமோ என்பது சந்தேகமான விடயமே! சோதனைச் சாவடிக ளிலே பல்லாயிரக்கணக்கான மக்களை எவ்வாறு சோதனையிட்டு, மாலை நான்கு மணிக்குள் வாக்களிக்க அனுமதிக்க முடியும். இதனை உயர் மட்டத்திலுள்ளோர் சிந்திக்கவேண்டும்.

ஆனந்தசங்கரி, டக்ளஸ் ஆகியோர் ஜனநாயகம் பற்றி அதிகம் பேசுகிறார்கள். அவர்



கள் இந்த உண்மையான ஜனநாயகப் பிரச்சினை தொடர்பாக பேசத்துணியமாட்டார்கள். ஏனெனில், அது அவர்களுக்கே ஆப்பு வைத்துவிடுமல்லவா.

இன்னும் பத்துப் பதினைந்து நாள்களிலே எல்லாம் முடிவாகப் பேசுகின்றன. யார் யார் தொடர்ந்து அரசியல் அரங்கிலே ஜெயிக்கப் போகிறார்கள் என்பதெல்லாம் தெரிந்து விடும். ஆடியிலும் அமாவாசையிலும் வந்துபோகும் சங்கரியார், டக்ளஸ் ஆகியோர் - அடியோடு யாழ்ப்பாணத்தை மறந்துவிடப்போகிறார்கள். பின் அடுத்த தேர்தல்வரின் மீண்டும் வருவார்கள் எங்கள் வாசலுக்கு. என்ன செய்வது எல்லாம் தமிழனின் தலைவிதி.

இதைவிட, கடந்தவாரம் நெடுந்தீவுக்குச் சென்ற ஈ.பி.டி.பி மக்களால் ஓடோட விரட்டப்பட்டார்கள். முன்னர் இவர்கள் மக்களின் எதிர்ப்புகளுக்கு முகம் கொடுக்கமுடியாது நெடுந்தீவை விட்டு வெளியேறினார்கள்.

தற்போது தேர்தலுக்காக அங்கு செல்ல, மக்கள் நல்ல பதிலைக் கொடுத்துள்ளார்கள். அடங்கிக் கிடந்த மக்கள் அடக்கத் தொடங்கிவிட்டார்கள். இனி ஈ.பி.டி.பியினர் அடங்கிப் போவதைத் தவிர வேறுவழியில்லை. அவர்களது வாக்குக் கோட்டையான தீவகம் இந்த முறை தனது உண்மையான வாக்குகளால் நல்ல பதில் சொல்லப்போகிறது.

## மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படாமலிருக்க தமிழ்க்கூட்டமைப்பிற்கு வாக்களியுங்கள்

### தமிழீழ விளையாட்டுத்துறையைச் சேர்ந்த இன்பன் தெரிவிப்பு

நாம் உண்ணும் உணவு, உடுக்கும் உடை, ஓடும் வாகனம் பயன்படுத்தும் ஆயுதம் அனைத்துமே எங்கள் அன்புக்குரிய மக்களாகிய உங்களது பணத்தினால் நிறைவேற்றப்படுபவையே. எங்கள் உடலில் ஓடும் ஒவ்வொரு துளி இரத்தமும் நீங்கள் தந்த உணவினால் ஊறியவையே. சுமார் 18 ஆயிரம் மாவீரர்களின் தியாகத்தால் இன்று நாம் இராணுவரீதியில் பல வெற்றிகளைக் குவித்து, மிகப் பலம் பொருந்திய நிலையில் உள்ளோம். எமக்கிருக்கும் இராணுவப் பலத்துக்குச் சமனான அரசியல் பலமும் எமக்கு வேண்டும். இரண்டும் இணையும்போதுதான் நாம் எமது போராட்டத்தில் வெற்றிபெற முடியும். உயிரிழந்த மாவீரர்களதும், போர்க்களத்தில் விழுப்புண்ணடைந்து ஊனமுற்றவர்களாக புனர்வாழ்வு முகாம்களில் வாழும் போராளிகளதும் கனவு நனவாக வேண்டுமானால், நாம் அரசியல் ரீதியில் பலப்பட வேண்டும். அதற்கு உங்களது வாக்குகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குக் கிடைக்கவேண்டும்.

இவ்வாறு மட்டுவில் வடக்கு ஸ்ரீவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் நடைபெற்ற தேர்தல் தொடர்பான மக்கள் சந்திப்பில் உரை நிகழ்த்திய தமிழீழ விளையட்டுத்துறையைச் சேர்ந்த இன்பன் தெரிவித்தார்.

ஏனைய எந்தக் கட்சி தோற்றாலும், அதனால் பெரிதாக தமிழினத்திற்கு ஆபத்து ஏதும் ஏற்படப்போவதில்லை. ஆனால், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தோற்கும் ஈனில், அது தமிழனுக்கு பேராபத்தாய் முடியும். சர்வதேச அரசியல் ஆய்வாளர்களின் கருத்துப்படி தென்னிலங்கையில் ஆட்சி அமைப்பதற்கு தமிழ் கூட்டமைப்பினரது ஆதரவை நாடவேண்டிய நிலையிலேயே சிங்களக் கட்சிகள் உள்ளன. அவ்வாறான ஒரு நிலையில், நாம் பலமாக நின்றால்தான் - தடைப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பித்து, எமது உரிமைகளை மீட்டெடுக்க முடியும். அதற்காக நீங்கள் ஒவ்வொருவரும் நன்றாகச் சிந்தித்து உங்களது வாக்குகளை வீட்டிற்கு நேரே புள்ளடி இடுவதன்மூலம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு வழங்கி, தமிழரின் ஒற்றுமையை உலகிற்கு நன்கு உணர்த்தவேண்டும் என்றார். இந்த நிலையில் நீங்கள் தவறுவீர்களாக இருந்தால், நாளை உங்கள் பிள்ளைகள் கூட ஆயுதம் தாங்கிப் போராடவேண்டிய நிலை ஏற்படலாம். மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படாமலிருக்க தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களியுங்கள் என்று அவர் தெரிவித்தார்.

(24)

# கொசோவாவின் நகரமொன்றில் பணிபுரிந்த ஐ.நா அதிகாரிகள் மீள அழைக்கப்பட்டுள்ளனர்!



கொசோவாவின் மிட்ரோவிகா நகரில் அல்பேனியர்களுக்கும், சேபியர்களுக்குமிடையே கடந்த இரு நாட்களாக நடைபெற்ற மோதல்களில், 31 பேர் வரை உயிரிழந்துள்ளனர். இதனால், ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரிகள் அங்கிருந்து மீள அழைக்கப்பட்டுள்ளனர்.

1999 ஆம் ஆண்டிற்கு பின்னர் மீண்டும் கொசோவாவில் வன்முறைகள் அதிகரித்துள்ளன. ஐக்கிய நாடுகளின் செயலாளரினால் அவசரமாக ஒழுங்குபடுத்தப்பட்ட கூட்டத் தொடரில் மிட்ரோவிகாவில் பணிபுரியும் ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரிகளை திரும்பவும் அழைத்துக் கொள்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

கொசோவாவில் 18500 நேட்டோ படையினர் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் 1000 படைகளை அங்கு அனுப்புவதென முடிவெடுக்கப்பட்ட பின்னர், கொசோவாவில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

அல்பேனியர்கள் - சேர்பியர்களின் மத வழிபாட்டு ஸ்தலங்களையும், சேபியர்களுக்குச் சொந்தமான வீடுகளையும் தீயிட்டுள்ளனர்.

இந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவித்த பாதுகாப்புச் சபை இவற்றை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும், உடன் நிறுத்துமாறும் கேட்டிருந்தது.

அத்துடன், ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் தனது கருத்தில், பல இனங்கள் கொசோவாவில் இணைந்து வாழ்வதை அல்பேனியர்கள் ஏற்றுக்கொள்ளவில்லையெனவும், சர்வதேச அமைதிப்படைக்கு எல்லா இனத்தவர்களும் ஒத்துழைக்க வேண்டுமெனவும் தெரிவித்திருந்தார்.

கொசோவாவில் சேர்பியர்கள் சிறுபான்மை இனமாக காணப்படுவதால் அவர்களின் பாதுகாப்பிற்கு அல்பேனியர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்பதையே கோபி அனான் கருதுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - நேட்டோ, ஐரோப்பிய ஒன்றியம் போன்ற அமைப்புகளின் வேண்டுதலுக்கு அல்பேனியத் தலைவர்கள் ஒத்துழைக்க முன்வந்தபோதும், ஆதரவாளர்கள் வன்முறைச் சம்பவங்களை தொடர்ந்தும் நடத்தி வருகின்றனர்.

அத்துடன், பிறிதொரு சம்பவத்தில் நேட்டோப் படையினரின் கட்டுப்பாடுகளைத் தாண்டி 'ஒபிலிக்' என்ற நகருள் நுழைந்து மதவழிபாட்டு தலமொன்றை அல்பேனியர்கள் எரியூட்டியுள்ளனர். இதன் பின்னர் அந்த நகரத்தில் வசித்த 100 க்கும் மேற்பட்ட சேர்பியக் குடும்பங்கள் அங்கிருந்து அகற்றப்பட்டனர்.

## தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டவேளை

# தாய்வான் ஜனாதிபதி, உப ஜனாதிபதி துப்பாக்கிச்சூட்டில் படுகாயம்!



(தாய்வான்)

தாய்வான் ஜனாதிபதி சென் ஆய் பியனும், உதவி ஜனாதிபதி அனெட்டா லூவும் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தவேளையில், தாய்வானின் தென்பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்தனர்.

ஜனாதிபதிக்கு வயிற்றிலும், உதவி ஜனாதிபதிக்கு காலிலும் காயமேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருவரும் உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும், ஆனால், அதிகம் பாதிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை - இன்று நடத்தப்படவுள்ள தேர்தலை - இந்தச் சம்பவங்கள் பாதிக்கப் போவதில்லை என தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - பி.பி.சியின் கிரிஷ் சொக் தெரிவித்த கருத்தில், திறந்த வாகனமொன்றில் தமது ஆதரவாளர்கள் மத்தியில் ஜனாதிபதி பிரயாணம் மேற்கொண்டிருந்த வேளையில், இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நிகழ்ந்துள்ளதாக தெரிவித்தார்.

இந்தச்சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக நோக்கு



# பாகிஸ்தான் படையினரின் சுற்றிவளைப்பில் அல்கொய்டா முக்கியஸ்தர் சிக்கியுள்ளார்

ஆப்கானிஸ்தான் எல்லையுடன் அமைந்துள்ள பாகிஸ்தான் பகுதியில், அல்-கொய்டாவின் முக்கிய தலைவர்களில் ஒருவரைச் சுற்றிவளைத்துள்ளதாகவும், சில மணி நேரத்தில் அவர் இருக்கும் இருப்பிடத்தைக் கைப்பற்ற முடியுமெனவும் பாகிஸ்தான் படையினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷராப் கருத்துத் தெரிவிக்கும்போது, தெற்குப் பாகிஸ்தான் பகுதியில் பலத்த எதிர்ப்பின் பின்னர் பாகிஸ்தான் படைகள் அவரைத் தமது சுற்றிவளைப்புக்குள் சிக்கவைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை - ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் அமெரிக்க தொலைக்காட்சியான சி.என்.என்.இற்கு கருத்துத் தெரிவிக்கையில், பலமான எதிர்ப்பினை தீவிரவாதிகள் வெளிப்படுத்துவதால், அல்கொய்டாவின் முக்கியமான தலைவர் ஒருவர் உள்ளே சிக்கியிருக்கலாம் எனவும் தெரிவித்தார்.

இதேவேளையில் - பி.பி.சியின் செய்தியாளர் நிக்சைட் கருத்து வெளியிடும்போது, 10 மைல் பரப்பளவுள்ள பிரதேசம் முற்றுகைக்கு உட்பட்டிருப்பதால், இரவில் மட்டுமே போராளிகள் தப்பித்துக்கொள்ள முடியுமெனவும் தெரிவித்தார்.

பாகிஸ்தான் படையினரால் முக்கியமான அல்-கொய்டாவின் தலைவர்களில் ஒருவரான சவாரி இந்த முற்றுகையின்போது கைது செய்யப்பட்டால், அது அல்-கொய்டா அமைப்பின் தலைவர் ஒஸாமா பில்லேடனுக்கு பாரிய தொரு இழப்பாகக் கருதப்படுகின்றது.

எகிப்தைப் பிறப்பிடமாகக்கொண்ட சவாரி பின்லேடனின் ஆன்மீகத் தலைவராகவும், வைத்தியராகவும் கடமையாற்றியுள்ளார். அத்துடன், அல்-கொய்டா அமைப்பினரின் திட்டங்களையும் சவாரி தயாரிப்பவரெனவும் கருதப்படுகின்றது. 1998 ஆம் ஆண்டு அமெரிக்காவைத் தாக்க வேண்டும் என்ற திட்டத்தினையும் அவர் உருவாக்கியிருந்தார்.

ஆரம்பத்தில் எகிப்திய இஸ்லாமிய அமைப்பான ஜிகாட் அமைப்பில் முக்கியமான ஒருவராகச் செயற்பட்டார். பின்னர், அல்-கொய்டாவுடன் ஜிகாட் அமைப்பு இணைந்து கொண்டது.

பாகிஸ்தானின் தென்பகுதி மலைப்பிரதேசமாகும். இந்த இடத்தில் பின்லேடன் மறைந்திருப்பதாக நீண்டகாலமாகக் கருதப்பட்டு வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதனிடையே - கடந்த வியாழக்கிழமை தலைநகர் காபூலின் தெற்கில் அமைந்துள்ள ஒறுஷ்கான் மாநிலத்தில் நடைபெற்ற மோதலில் இரு அமெரிக்கப்படை வீரர்கள் கொல்லப்பட்டும், இருவர் காயமடைந்தும் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் எனக்கூறி

# தவறாக வழிநடத்தப்பட்டதாக போலந்து ஜனாதிபதி தெரிவிப்பு



ஈராக்கில் பேரழிவைத் தரக்கூடிய ஆயுதங்கள் காணப்படுவதாக பொய்யான தகவல்களின் மூலம், போலந்து தவறான முறையில் வழி நடத்திச் செல்லப்பட்டதாக போலந்தின் ஜனாதிபதி அலெக்ஸ்சாண்டர் கவஷ்னெஷ்சி தெரிவித்துள்ளார்.

ஆனால், ஈராக்கின் மீது போர் தொடுத்தது சரியான முடிவு எனவும், கருத்து வெளியிட்டுள்ளார். எனவே, போலந்து வீரர்களை ஈராக்கிலிருந்து வெளியேற்றும் நோக்கம் தமது நாட்டிற்கு இல்லை எனவும் தெரிவித்தார்.

அமெரிக்காவினால் ஈராக்கின் மீது போர் மேற்கொள்ளப்பட்டபோது, போலந்து முழுமையான ஆதரவு தெரிவித்திருந்தது. மேலும் ஈராக்கில் உள்ள வெளிநாட்டு படையின் எண்ணிக்கையில் போலந்துப் படைகள் நாலாவது இடத்தில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போலந்து நாட்டின் பிரதமர் தெரிவிக்கும்போது, ஈராக்கில் சதாம் ஹுசைனின் ஆட்சிக் காலத்திலும் பார்க்க மக்கள் தற்போது சந்தோசமாக காணப்படுவதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் - ஸ்பெயின் ஈராக்கில் பணிபுரியும் படையினரைத் திரும்பவும் அழைக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளது. கடந்த வார இறுதியில் சோசலிஷக் கட்சியின் வெற்றியின் பின்னர் ஸ்பெயின் இந்த முடிவினை மேற்கொண்டிருந்தது.

# அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஈராக்கிற்கு நேற்று திடீர் விஜயம்!



ஈராக்கில் அதிபர் சதாம் ஆட்சியில் இருந்து நீக்கப்பட்டு ஓராண்டு நெருங்கும் வேளையில், அமெரிக்க இராஜாங்க செயலர் கொலின் பவல் ஈராக்கின் தலைநகரிற்கு நேற்று விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

பாக்தாத்தில் அமைந்துள்ள விமான நிலையத்தில் இருந்து, அமெரிக்க அரசின் தலைமையகம் அமைந்துள்ள பாதுகாப்பான பிரதேசத்திற்கு ஈராக்கின் அமெரிக்க நிர்வாகி போல் பிறீமரைச் சந்திப்பதற்காக அழைத்துச் செல்லப்பட்டார்.

இதனிடையே, நேற்று முன்தினம் பஸ்ராவில் நடந்த கார்க்குண்டு தாக்குதலில் நால்வர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஈராக்கின் மீள்கட்டுமானப்பணியினை இத்தாக்குதல்கள் பாதிக்கமாட்டாதென வெள்ளைமாளிகைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

# சதாம் தகவல்களை தெரிவிக்க மறுக்கிறாராம்!

## றிச்சட் ஆர்மிரேஜ் கூறுகிறார்

சிறைவைக்கப்பட்டுள்ள ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் பயனுள்ள எந்தத் தகவல்களையும், விசாரணை மேற்கொள்பவர்களிடம் தெரிவிப்பதற்கு மறுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால், அவர்களுடன் வேறு விடயங்களை உரையாடி வருவதாக அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் தெரிவித்துள்ளார்.

மேலும் விவாதங்களில் ஈடுபடுவதையே சதாம் ஹுசைன் விரும்புவதாகவும் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பொதுத்தேர்தலை முன்னிட்டு — மோட்டார் திணைக்களத்தின் செயற்பாடுகள் இடைநிறுத்தம்

## ஆணையாளர் தெரிவிப்பு

ஏப்ரல் இரண்டாம் திகதி இடம் பெறவுள்ள பொதுத்தேர்தலை முன்னிட்டு யாழ். மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தனது செயறபாடுகளை இடைநிறுத்தி இருப்பதாக திணைக்கள உதவி ஆணையாளர் பத்மநாதன் தெரிவித்தார்.

யாழ். செயலகத்தில் தேர்தல் தொடர்பான கடமைகள் பல மேற்கொள்ளப்படவேண்டியிருப்பதால் அவற்றிக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காகவும், தேர்தல் நடைபெறவுள்ள இவ்வேளைகளில் பணிகளைத் தொடர்வதில் சிரமங்கள் ஏற்படலாம் என்பதனைக் கருத்தில் கொண்டே கடந்த 18 ஆம் திகதி முதல் யாழ்.மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதன் பணிகள் யாவும் எதிர்வரும் ஏப்பிரல் மாதம் ஆறாம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படும். அதுவரை பொதுமக்கள் யாழ். செயலகத்திற்கு எமது திணைக்களம் தொடர்பான விடயங்களை மேற்கொள்வதற்கு வருவதை தவிர்த்துக்கொள்ளுதல் வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# மருத்துவர்களின் வேலைநிறுத்தம் நேற்றுடன் முடிவுக்கு வந்தது!

(கொழும்பு)

அரச மருத்துவ அதிகாரிகள் நாடளாவிய ரீதியில் மேற்கொண்டு வந்த வேலை பகிஷ்கரிப்புப் போராட்டம் நேற்றுடன் முடிவுக்கு வந்தது.

அரச மருத்துவ ஊழியர்கள் தமக்குள் இருக்கின்ற சம்பள முரண்பாடுகளை நீக்குமாறுகோரி, பகிஷ்கரிப்புப் பேராட்டத்தை கடந்த இரு வாரங்களாக நடத்திவந்தனர்.

இவர்களுடைய சம்பள முரண்பாடுகள் குறித்து நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி, திறைசேரியின் செயலாளர் சரித்த ரத்வத்த ஆகியோருக்கு இடையில் நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத்து இந்த வேலைநிறுத்தம் முடிவுக்குவந்தது.

இந்தச் சந்திப்பின்போது அரசாங்க மருத்துவர்களின் சம்பளங்கள் குறித்து சம்பள மீளாய்வுக்குழுவிடம் சமர்ப்பிப்பது என்றும், எதிர்வரும 29 ஆம் திகதி கூடவுள்ள சம்பள ஆணைக்குழுவின் விசாரணையின்போது இந்த விடயத்தை முதலில் எடுத்துக்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானம் குறித்து அரசாங்க மருத்துவ சங்கப் பிரதிநிதிகள் உடன்பாட்டுக்கு வந்ததை அடுத்து நேற்று நண்பகல் முதல் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டுள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது. (01)

# அன்னை பூபதி...

தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் ஈகச்சுடரினை ஜெயந்தன் படையணி அரசியற்துறைப் பொறுப்பாளர் ஜீவகுமார் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியினை ஜெயந்தன் படையணி நிர்வாகப் பொறுப்பாளர் எழுநிலவன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து தியாகி அன்னை பூபதியின் திருவுருவப் படத்திற்கான ஈகைச்சுடரினை மாவீரரின் தாயார் சரஸ்வதி ஏற்றிவைத்து மலர்மாலை அணிவித்தார்.

நினைவுரையினை ஜெயந்தன் படையணிப் போராளிகளான இராசு, வர்மன் ஆகியோர் நிகழ்த்தினர். இந்தநிகழ்வில் பொதுமக்கள் போராளிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை தியாக தீபம் அன்னைபூபதியின் 16 ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் நேற்று குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் உணர்ச்சிபூர்வமாக இடம்பெற்றது.

நேற்றுக்காலை 9.00 மணியளவில் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் இடம்பெற்ற நிகழ்வின் போது ஈகச்சுடரினை கப்டன் சுருளி, கப்டன் அருணா, 2 ஆம் லெப்டினன் தமிழ்ச்செல்வன் ஆகிய மூன்று மாவீரரது சகோதரனும், மாவீரர் கப்டன் கலைமதியின் தாயாரும் ஏற்றிவைத்தனர்.

தேசியக்கொடியினை யாழ். மாவட்ட அரசியற்துறைதுணைப் பொறுப்பாளர் செம்மணன் ஏற்றிவைத்தார். தியாகதீபம் அன்னை பூபதியின் நினைவுரையினை யாழ். மாவட்ட அரசியற்துறைதுணைப் பொறுப்பாளர் செம்மணன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற வேட்பாளர் கஜேந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதே சமயம் வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் இடம்பெற்ற அன்னை பூபதியின் நினைவு நிகழ்வின்போது -ஈகச்சுடரினை வடமராட்சிக் கோட்டக் கலவிக்கழகப் பொறுப்பாளர் தாயகன் ஏற்றினார்.

தேசியக்கொடியினை வடமராட்சிக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தயா ஏற்றிவைக்க, தமிழீழ விளையாட்டுத்துறையைச் சேர்ந்த வனிதன் அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கு .மலர் மாலையை அணிவித்தார்.

யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையில் இடம்பெற்ற நினைவு நிகழ்வின் போது தேசியக் கொடியினை யாழ்.மாவட்ட வனவள பாதுகாப்புப்பிரிவுப் பொறுப்பாளர் லக்ஷ்மன் ஏற்ற, ஈகச்சுடரை கோண்டாவில் கிழக்கு வர்த்தகசங்கத்தலைவர் சுதா, நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தைச் சேர்ந்த சுதாகரன், கோண்டாவில் முச்சக்கரவண்டிச் சேவைகள் சங்கத்தலைவர் காந்தன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் பிரபா அன்னைபூபதியின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்தார்.

இந்நிகழ்வில் பெருமளவான போராளிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (116)

# விடத்தல் தீவு மீனவர்களால் 8 இந்திய மீனவர்கள் சிறை!

(மன்னார்)

மன்னார் விடத்தல்தீவு கடற்பகுதியில நேற்று முன்தினம் இரவு அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடித் தொழிலில் ஈடுபடமுயன்ற எட்டு இந்திய மீனவர்ளும் அவர்களது இழுவைப் படகொன்றும் உள்ளூர் மீனவர்களால் பிடிக்கப்பட்டு விடத்தல் தீவு மீனவ சங்கதில் ஒப்படைக்கபட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது.

நேற்று முன்தினம் இரவு சுமார் பத்து மணியளவில் 13 இழுவைப் படகுகளில் வந்த இந்திய மீனவர்கள் விடத்தல்தீவு கடற்பகுதியில் அத்துமீறி பிரவேசித்தனர்.

இதனைக்கண்ட உள்ளூர் மீனவாகள் அவாகளிடம் சென்று, அந்தப்பக்கம் நாம் வலைவிரித்துள்ளோம் என்றும், அதற்கு நீங்கள் செல்ல வேண்டாமமெனக் கூறினார். ஆனால் அவர்கள் அதனைப் பொருட்படுத்தாமல் உள்ளூர் மீனவர்களைத் தாக்கிவிடடு குண்டுகளையும் அவர்கள் மீது வீசினர்.

இதனால் உள்ளூர் மீனவர்களில் மூவர் காயமடைந்தனர். இதன் பின் இந்திய மீனவர்கள் உள்ளூர் மீனவர்கள் விரித்த வலையினை இழுவைப் படகுகள் மூலம் சேதப்படுத்தினர்.

இவ்வாறு வலைகளைச் தேசதப்படுத்தியவேளை ஒரு இழுவைப் படகு வலைக்குள் சிக்குப்பட்டு நகர முடியாமல் நின்றது.

இதனையடுத்து உள்ளூர் மீனவர்களால், இந்தப் படகில் வந்த நான்கு மீனவருடன், மற்றையதொரு படகில் வந்த நான்கு மீனவர்களும் பிடிக்கப்பட்டு விடத்தல்தீவு கடற்கரைக்கு கொண்டு வரப்பட்டனர்.

இவ்வாறு பிடிக்கப்பட்ட மீனவர்கள் தற்போது விடத்தல்தீவு மீனவர் சங்க கட்டத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு இராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த பாலு - அண்ணாமலை, முனிசாமி - முத்துராமலிங்கம், ஆண்டி - பால்ராஜ், அம்மாச்சி - நம்பு அத்துடன், விக்ரோறியா நகர் தங்கச்சிமடத்தைச் சேர்ந்த சகோதுரர்களான செபஸ்தி அந்தோணி, செபஸ்தி - நிக்ஸன், இராமேஸ்வரத்தைச் சேர்ந்த தங்கப்பதம் - முருகேசு, முருகன் - அழகுசாமி ஆகிய எண்மருமே பிடிக்கப்பட்டவர்களாவர்.

இது தொடர்பாக விடத்தில்தீவு மீனவ சங்கத் தலைவர் மதி "நமது ஈழநாடு" விற்குத் தெரிவிக்கையில்-

அண்மைக்காலமாக எமது பகுதியில் இந்திய மீனவரின் தொல்லை அதிகரித்த வண்ணமுள்ளது. இவர்களை நாம் பிடித்து வைத்திருப்பது தொடர்பாக மன்னார் மாவட்ட அரச அதிபர், ஆயர், க்டற்திணைக்கள பரிசோதகர் ஆகியோருக்கு அறிவித்துள்ளோம் இவர்கள் இன்று வந்து பார்வையிடவுள்ளனர்.

இந்த மீனவர்களின் அத்துமீறலுக்கு உறுதியான முடிவென்றினைப் பெற்றபின்பே இவர்களை நாம் விடுவிப்போம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை இந்திய மீனவர்களின் இந்த அத்துமீறல் நடவடிக்கைகளைக் கண்டித்து விடத்தல்தீவு மீனவர்கள் நேற்று தொழிலுக்குச் செல்லாமல் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இவர்களது அத்துமீறல் தடுக்கப்படாவிட்டால், தாம் சாகும் வரையிலான உண்ணாவிரதப்போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாகவும் தெரிவித்தனர். (201)

# கொத்தணி வாக்களிப்பு...

வாக்காளர்கள் சோதனை செய்யப்படுவர். பொதுவான இரண்டு இடங்கள் வாக்களிப்பு நிலையங்கள் அமைப்பதற்குத் தெரிவுசெய்யப்பட்டன.

பளையில் இருந்து பிரயாணிகள் யாழ்.வரும்போது பரிசோதனை செய்யப்படும் இடமும், யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி செல்வோர் பரிசோதனை செய்யப்படும் இடமும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. வாக்களிப்பு நிலையங்களை அமைபபதற்கான வேலைகள் எதிர்வரும் 30 ஆம் திகதிமுதல் ஏப்ரல் 1 ஆம் திகதிவரை இடம்பெறும். முகமாலை கொத்தணி வாக்களிப்பு நிலையத்திற்கு அண்மையாக தேனீர்ச்சாலை ஒன்று அமைக்கப்படும். அங்கு கடமையாற்றுவதற்கு தேர்தல் உத்தியோகத்தர்கள் யாழ். தேர்தல் மாவட்டத்தில் இருந்தே தெரிவு செய்யப்படுவர்.

வாக்களிக்கவரும் மக்களுக்கான சகல போக்குவரத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படும். முகமாலை பாதையூடாக ஏப்ரல் 1 ஆம் திகதி நண்பகல் 12 மணிமுதல் தேர்தல் தினத்தன்று முழுநாளும் லொறிகளின் போக்குவரத்து இடைநிறுத்தப்படும்.

இதேவேளை நாகர்கோவில் பாதையினை திறப்பதற்கு படையினர் மறுப்பு தெரிவித்தனர். அத்துடன், கண்ணிவெடி உள்ள பகுதிகளில் எச்சரிக்கை பலகைகள் போடப்படவும் நடவடிக்கை எடுக்கப்படும். தேர்தல் செயறபாட்டுக்கு 93 கிளிநொச்சி கிராம சேவகர்களும், விடுதலைப் புலிகளும் போக்குவரத்து வசதிகளுக்கு சகல உதவிகளையும் வழங்குவதாக தெரிவித்துள்ளதாகவும் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவித்தார்.(தீ)

## கரு, மஹிந்த...

இந்த இரண்டு முக்கிய தலைவர்களையும் கொல்லும் திட்டத்துடன் செயற்படும் இந்த இனந்தெரியாத நபர்கள் புலிகளின் குழுவொன்றுக்குள் நுழைந்திருக்கலாம்

இரண்டு பிரதான கட்சிகள் மற்றும் வேறு சில தரப்பினர் இத்தகைய அரசியல் படுகொலைகளின் மூலம் சாதாரண மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காகப் பயன்படுத்தக்கூடும்

ஏனெனில் இவர்களில் பலருக்கு இது செய் அல்லது செத்துமடி என்ற வகையிலான தேர்தலாக அமைந்துளளது. என்றும் புலனாய்வுத் தகவலகளை மேற்கோள்காட்டும் செய்தி மேலும் தெரிவித்தது.

## தமிழக...

பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக தலைமன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மீனவர்களது இரண்டு வலைகளும், இரண்டு 60 லீற்றர் வெற்றுக்கான்களும் கடற்படையினரின் பாதுகாப்பில் உள்ளதாக படைத்தரப்பு தெரிவித்தது.

## ஜனாதிபதி,...

பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்படவுள்ளன.

புலிகள் இயக்கத்தில் ஏற்பட்ட நெருக்கடியால் பிரிந்து சென்ற ஒரு குழு தாக்குலில் ஈடுபடலாமென எதிர்பார்க்கப்படுவதாக பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டார்.

## சீனியின் விலை...

தீர்வையைக் குறைப்பதற்கான தீர்மானத்தை எடுத்துள்ளது.

சீனிக்கான இறக்குமதித் தீர்வை குறைக்கப்பட்டதால் அரசாங்கத்திற்கு 250 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு பந்துல குணவர்த்தன தெரிவித்தார். (01)

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1600 திகதி: 19.03.2004

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| W | 0 | 2 | 1 | 4 | 4 | 8 |




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.03.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.